Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම  KANNOTTAM

நாகரீகமான,
கண்ணியமான
மனிதரை மனிதர்
மதிக்கும்
சுதந்திர
தேசமொன்றை
நோக்கி
முன்னேறுவோம்.

வெளியீடு-27  20 ஆகஸ்ட் 2005  விலை:- 07.00

# இலங்கை எதிர்நோக்கி நிற்கும் சவால்

இலங்கை மீண்டும் மீண்டும் பாரிய சவால்களை எதிர் நோக்கி நிற்கிறது. இலங்கையில் வாழும் பல்வேறு சமூகங்களும் மனித குல விரோத நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்லும் நிலைமைகளின் காரணமாக கொலம்பியா, லெபனான் போன்ற நிலைமைகளை எதிர்நோக்கி நிற்கின்றன இதிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற பாரிய கேள்வி எழுந்துள்ளது.

பாசிசமும், பாதாள உலகமும், அதிகார அகங்காரமும் இலங்கை சமூகத்தில் முடிவுகட்டப்படாவிட்டால் சமகால உலகில் முன்னேற்றப் பாதையில் இலங்கை காலடியெடுத்து வைக்க முடியாது.

பயங்கரவாத வன்முறை என்பது இன்று உலகப் பொது நிகழ்வாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்த பயங்கரவாத வன்முறைகளை ஆதரிக்கும் மனிதகுல விரோத பிரகிருதிகளும் அதிகரித்து வருகிறார்கள். தென்னாசியா, தென்கிழக்காசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, மத்திய கிழக்கு என பயங்கரவாத வன்முறைகள் தமது கொடூரங்களை கட்டவிழ்த்து வருகின்றனர். இதற்கு முடிவு கட்டுவது உலகளாவிய தேவையாகவும் இன்று அமைந்துவிட்டது.

சிறுவர், சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டும் சக்திகள் அவை அரசாக இருந்தாலென்ன, குழுக்களாக இருந்தாலென்ன அவர்கள் மீது பொருளாதாரத்தடை, போககுவரத்துத் தடை, ஆயுத தளபாடத் தடை, விதிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத இயக்கங்கள் மீதான தடை சில நாடுகள் மேற்கொண்டிருக்கின்றன. போதையூட்டும் மத, இன வெறி பிரச்சாரங்களை தடைசெய்வதற்கான இயக்கங்களும் சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆனால் விடுதலைப் போராட்டம் என்ற முகமூடியின் கீழ் பயங்கரவாதம தன்னை தக்கவைத்துக் கொள்ள முயல்கிறது. பயங்கரவாததின் நலனுடன் சம்பந்தப்பட்ட சக்திகள் சட்டவிரோத வர்த்தக ஸ்தாபனங்களாகவும் அடிப்படைவாத ஊடகங்களாகவும்,

தொடர்ச்சி 07ம் பக்கம்




கிளிநொச்சியில் ஐ.நா கொடியை இறக்கும் அராஜகவாதிகள்

# கதிர்காமர் படுகொலை தமிழ்ப் பாசிசத்தின் இன்னுமொரு முகம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களை புலிகள் படுகொலை செய்ததை இலங்கையின் ஜனநாயக அரங்கு முற்று முழுதாக கண்டிக்கிறது.



யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கும் அதேகாலப் பகுதியில் யுத்தப் பிரகடனம் செய்வது சமாதான முயற்சிகளை பின்தள்ளி சடுதியாக யுத்தத்திற்கு செல்வற்கான புலிகளின் சதி முயற்சி என்றே கருத வேண்டியிருக்கிறது.

புலிகள் கதிர்காமரை ஒரு பிரச்சினைக்குரிய ஆளாகவே சித்தரித்திருந்தனர். அதாவது அவர் ஒரு துரோகி, ஏனென்றால் அவர் ஒரு தமிழர், இலங்கை அரசாங்கத்தில் உயர் பகுதிகளில் இருக்கிறார். புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை அவர் எதிர்த்து வந்திருக்கிறார். ஆறு வாரங்களுக்கு முன்பு ஏன் தான் கொல்லப்படலாம் என்று தெரிவித்திருந்தார்.

சுனாமி கட்டமைப்பு உடன்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் சார்பில் கதிர்காமர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் இந்த புதிய அத்தியாயம் ஒன்று உருவாகியிருப்பதாக தெரிவித்திருந்தார்.

அந்த வைபவத்தில் கதிர்காமர் தெரிவிக்கையில் புலிகளுடன் உடன்பாடு கண்டிருக்கும் அதேவேளையில் இந்த முயற்சி புலிகளும் நோர்வே அரசும் ஜனநாயகத்தை மீள் நிறுவுவதிலும், மனித உரிமைகளையும் கன்னியமான வாழ்வையும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இது உருவாக்குவதையும் இந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.





நோர்வே அரசுக்கு அவர் தெரிவிக்கையில் இந்த ஜனநாயகத்துக்கான இயக்கம் வடக்கு கிழக்கின் சில மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதனை நோர்வே அரசாங்கத்தினால் செய்ய முடியாவிட்டால் அவர்கள ஒரு பக்கம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். வேறு சக்திகள் அந்த பகுதிகளில ஜனநாயகத்தை நிறுவுவதற்கான வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

புலிகள் ஜனநாயகத்திலேயோ, சமாதான பேச்சுவார்த்தைகளிலோ அக்கறையாக இல்லையென்பதை பேச்சுவார்த்தையின் மறு தரப்பான அரசாங்கத்தின் அமைச்சரவையின் மூத்த உறுப்பினர் ஒருவரை படுகொலை செய்ததன் மூலம் அம்பலப்படுத்தியுள்ளனர்.

# ரேலங்கி செல்வராஜா தம்பதியினருக்கு எம் அஞ்சலிகள்

தமிழ் சமூகத்தினுள் வீதியில் கொலை, வீட்டில் கொலை, கோயிலடியில் கொலை, குளக்கரையில் கொலை, ஆற்றங்கரையில் கொலை, அலுவலகத்தில் கொலை, அகதிமுகாமில் கொலை, தூங்கும் போது கொலை, எழுந்தால் கொலை, நின்றால் கொலை என்று வயது, பால், வித்தியாசமின்றி ஒரு காட்டுமிராண்டிக் கலாச்சாரம் புலிகளால தொடர்ந்து அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.



பம்பலபிட்டியில் உளள தமது தொலைதொடர்பு நிலையமொன்றில் வைத்து ரேலங்கி அவர்களும், அவரது கணவர் செல்வராஜா அவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். ஒன்பது மாதக் குழந்தையின் தாய், தந்தையரான இவர்கள் தமிழர்களின் விடுதலையின் பேரில் கொல்லப்பட்டார்கள்.

பெண்களை, குழந்தைகளை, வயோதிபர்களை, கொல்லும் கயமை நிலைக்கு எமது சமூகத்தின் விடுதலை என்று சொன்னவர்கள் சீரழிந்திருக்கிறார்கள். இவர்கள் கையில் தமிழர்களின் தலைவிதி முழுதாக சென்றடையுமானால் என்ன நடைபெறும் என்பதை நாம் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது.

ரேலங்கி அவர்கள் 1970களின் நடுப்பகுதியில் "தெய்வம் தந்த வீடு" என்ற திரைப்படத்தின் ஊடாக தனது கலைத்திறமையை வெளிப்படுத்தியவர். பின்னர் யாழ்ப்பாண மணிக்குரல் விளம்பர சேவையில் அறிவிப்பாளராக செயற்பட்டவர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பவராக, நாடக கலைஞராக, கலை நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துபவராக பணியாற்றியவர். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திலும் அவர் செய்தி வாசிப்பவராக பணியாற்றியவர். ஒவ்வொரு ஞாயிறு கிழமைகளிலும் உதயதரிசனம் நிகழ்ச்சியை காலை 9.00-10.30 வரை நடத்திக் கொண்டிருந்தவர். சிறந்த மேடை நாடகக் கலைஞர். ஒரு கலைஞர், ஒரு ஊடகவியலாளர், ஒரு தாய் என்ற ஸ்தானத்தில் அவர் இரத்த சகதியில் வீழும்வரை வாழ்ந்தவர்.

யாழ் மருத்துவ கல்லூரி பேராசிரியர் ரஜனிதிரணகம தான் கற்பிக்கும் மருத்துவக் கல்லூரி வாசலில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டார். யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரன் மிக நெருக்கடியான காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வந்தவர் தனது வீட்டில் வைத்து கொலலப்பட்டார்.

தனது எழுத்துக்களில் மனிதாபிமானத்தை வலியுறுததியதற்காக யாழ பல்கலை கழக மாணவி செல்வி கடத்திச் செல்லப்பட்டார். இன்று வரை அவருக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது. மட்டக்களப்பில் சமூகத்தின் உரிமைகளுக்காக பாடுபட்ட கலாவும், அவரது கணவர் தம்பிமுத்துவும், கனடிய தூதரக வாசலில் வைதது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணோட்டம்



# இரத்த விளாறாகிவிட்ட நாடு

ஒரு இலட்சிய தேசம் என்பது சுரண்டலற்றதாக, பல்வேறு மொழி, மத, சமூகங்களிடையே ஐக்கியம் நிலவும், பொருளாதார வளங்கள் சமத்துவமாக பகிரப்பட்டும், கலை கலாச்சாரம் செழிப்புற்றும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் என்பன மக்களுக்கு சீராக கிடைப்பதற்கான சூழ்நிலைகள் நிலவும், மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் மரியாதையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்வர். காட்டுக் கூச்சல்களுக்கோ, அடிதடிகளுக்கோ, ஆபாசங்களுக்கோ, போதைக்கோ, வன்முறைக்கோ அங்கு இடம் இருக்காது. மக்கள் மீது அடாவடித்தனம் புரியும் நிறுவனங்கள் இருக்காது. விஞ்ஞானமும், கலையும், செழிப்புற்றுக் காணப்படும்.

ஆனால் இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இங்கு நடப்பதென்ன. பொருளாதாரத்தில் நாங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறோம், உல்லாச பிரயாணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று புளகாகிதமடைவதற்கு இங்கு என்ன இருக்கிறது. 20 வருட யுத்தம், அதன் பின்னர் சுனாமி, ஓயாத கொலைகள் அதன் விளைவுகள் என்று இருக்கின்ற இந்த நாட்டில் முதலில் என்ன செய்யப்பட வேண்டும்? இது மிகவும் எளிமையான ஒரு கேள்வி. இந்த அராஜக சூழல் இந்த இருண்ட சூழல், காட்டுமிராண்டிநிலை இதிலிருந்து நாம் விடுபடுவதே முதலும் முக்கியமானதுமாகும்.

கொலை அராஜகம் புரிபவர்கள், தற்கொலை குண்டுதாரிகள் மூலம் படுகொலை, பிஸ்டல் குழுக்கள் மூலம் படுகொலை, குண்டர் கூட்டத்தை வைத்து அடித்து, வெட்டி கொலை, கடத்திச் சென்று கொலை, சிறைகளிலும், சித்திரவதைகளிலும் வைத்து கொலை, சினைப்பர் கொலை என ஒரு காட்டுமிராண்டிக் கூட்டம் கொலை அராஜகம் புரிந்து திரிகிறது. இலங்கையில் அரசாங்கம் இருக்கிறது. மனித உரிமை ஆணைக்குழு இருக்கிறது. ஐ.நா சபையின் காரியாலயங்கள் இருக்கின்றன. வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை முழுவதும் சுற்றித் திரிகிறார்கள். சமாதான செயலகம் வேறு இருக்கிறது. யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு இருக்கிறது, சமாதானத்துக்கான சர்வதேச அனுசரணையாளர்கள் இருக்கிறார்கள், பொலிஸ், நீதிமன்றம், எல்லாம் இருக்கிறது. சிவில் சமூகத்தவர்கள் இருக்கிறார்கள். பல்வேறு ஜனநாயக அரசியல் கட்சிகள் இருக்கின்றன. எல்லாம் இருந்தென்ன. கொலைகள் அதிகரித்துத்தான் செல்கின்றன. சிறுவர் சிறுமியர் யுத்தத் தேவைகளுக்காக பிடித்துச் செல்லப்படுகிறார்கள். பொதுமக்களிடம் கப்பம் அறவிடப்படுகிறது. பணத்திற்காக ஆட்கள் கடத்திச்செல்லப்படுகிறார்கள். சமூகங்களிடையே பதட்ட சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. சுனாமி அகதிகளின் நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதி, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் தொடர்ந்து அபகரிக்கப்படுகின்றன. வயோதிபர்கள், நோயாளிகளுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்த அக்கிரமங்கள் 20 மில்லியன் மக்கள் வாழும் இந்த நாட்டில் வன்னிக் காட்டிற்குள் மறைந்திருந்து கொண்டு ஒரு சிறு பிரதேசத்தை கைப்பற்றி வைத்திருக்கும் ஒரு கும்பல் அரங்கேற்றிக்கொண்டு இருக்கிறது. இவர்கள் அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளுடாக தனது இன்னுமொரு மறைவிடத்திற்கு செல்வதற்கும் அரச படைகளின், பொலிஸ், ஹெலிகொப்டரில் பாதுகாப்புடன் சென்று வருகிறார்கள். இன்னொரு நாட்டிற்கு செல்வதானால் சர்வதேச விமான நிலையத்தில் போய் இறங்குகிறார்கள். அரச படைகளின் கொமாண்டோ பாதுகாப்பு வேறு கிடைக்கிறது. இவ்வாறெல்லாம் செய்து கொண்டு பொலிஸ் அதிகாரியை கடத்திச் சென்று அடித்துக் கொல்கிறார்கள். வெளிவிவகார அமைச்சருக்கு சினைப்பர் தாக்குதல் நடத்துகிறார்கள்.

நாளும் பொழுதும் மாற்றுக் கட்சியினரை படுகொலை செய்து அவர்களை இல்லாதொழித்து தமது ஏகபிரதிநிதித்துவம் என்ற பாசிச அரசை ஸ்தாபிக்க முனைகிறார்கள். இவர்களை ஆதரிக்க தமிழ் ஊடகப் புரவலர்கள் இருக்கிறார்கள். இந்த ஊடகங்கள் சில தற்போது புலிகளின் மொழியிலேயே பேசுகின்றனர். எம்மை விஞ்சுவதற்கு எவருமில்லை என மார் தட்டுகிறார்கள். இன்னும் சில ஊடகங்கள் அவதூறு பரப்புவதும், உண்மைகளை மூடி மறைப்பதும், திரித்துக் கூறுவதும், மிரட்டுவதும் என்று தொழிற்படுகின்றன. இவை ஊடகங்கள் என்பதை விட தமிழ் பாசிசத்தின் கைக்கருவிகள் என்பதே பொருந்தும்.

ஆனால் இந்த அராஜகக் கும்பலையும் அதன் அடியாள் திருக்கூட்டமாகத் திகழும் சக்திகளின் நலன்களினதும் ஏதோவொரு அளவில் பாதுகாப்பதாகவே இலங்கை, சர்வதேச சமூக அக்கறை அமைப்புக்களின் நடவடிக்கைகள் அமைகின்றன.

சாதாரண மனித நியாயத்தின் படி கொலை, ஆட்கடத்தல், சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு அணிதிரட்டல், வறியவர்களின், பாதிக்கப்பட்டவர்களின் பணத்தையும் பொருளையும் அபகரித்தல் மனிதகுல விரோத குற்றங்களாகும். ஆனால் இந்த குற்றங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதன் மர்மம் என்ன?

உண்மையான சமாதானம் இந்த நாட்டில் உருவாக வேண்டுமானல் அந்த சமாதான முயற்சிகளில் பங்குபற்றுபவர்கள் மனிதர்களாக இருக்க வேண்டும். இதுவொரு அடிப்படை இருக்க வேண்டும். மிருகங்களை விட கொடியவர்களுடன் மனிதர்கள் பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

உண்மையில் பெருவாரியான மக்கள் நலன்களுடன் சாராத பணம் சம்பாதிப்பதையே குறியாகவும், வெறியாகவும் கொண்ட சக்திகளும், தென்னாசியாவில் சீர்குலைவை ஏற்படுத்த முயலும் சக்திகளும் இலங்கையின் வளங்களை சூறையாடிச் செல்ல அவா கொண்ட சக்திகளும் இதில் உண்மையான விடயங்களை நெற்றிப் பொட்டில் இடிக்கும் விடயங்களை தவிர்த்துவிட விளைகின்றன.

சாதாரண மக்கள் படுகொலைகளற்ற தமது பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கக் கூடிய, தமது சமூக பொருளாதார முயற்சிகளை எந்தவித அச்சுறுதலும் இன்றி மேற்கொள்ளக்கூடிய சமூக சௌயன்யத்துடன் ஐக்கியமாக, மகிழ்ச்சியாக வாழக்கூடிய ஒரு சூழலையே அவாவி நிற்கிறார்கள்.

# நெஞ்சில் உரமுமின்றி நேர்மை திறனுமின்றி.....

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் படுகொலையையடுத்து இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் அதனை சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோது புலிகள் அதனை ஒத்துக்கொள்ளவில்லை. அதனை சீரமைக்கத் தேவையில்லை இருக்கின்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தினால் சரி என்றும் அதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா நோர்வே பிரதமருக்கு இது தொடர்பில் ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தார். நோர்வே அனுசரணையாளர்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னிலையில் பேச்சுவார்த்தை உடனடியாக நடைபெற வேண்டுமென கோரிக்கை விடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் படுகொலையை பயங்கரவாதக் குற்றச்செயலென உலக நாடுகளிலிருந்து ஐ.நா வரை கண்டித்திருந்தன. இந்த பயங்கரவாதச் செயலில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தன.

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை என்பது போல் இந்த பயங்கரவாத செயலில் ஈடுபட்டவர்கள புலிகள்தான் என்பதில் யாருக்கும் எந்த பாமரனுக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

எனினும் புலிகள் வழமைபோல் இந்தப் படுகொலையையும் மறுத்திருக்கிறார்கள். அவர்கள் மறுக்கும்போதே, அந்த மறுப்பினுள்ளேயே கதிர்காமர் தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டவர், சர்வதேச நாடுகளில் புலிகள் தடை செய்யப்படுவதற்காக வேலை செய்தவர். சிறுவர் சிறுமியரை படையணிகளில் இணைப்பது சம்பந்தமாக சர்வதேச அளவில் நெருக்கடிகளை தோற்றுவித்தவர் என்று, அவரின் படுகொலைக்கான புலி நியாயங்களையும் வைக்கத் தவறவில்லை.

தமிழ்நெட் தொடக்கம் புலிகளின் நிதர்சனம் டொட் கொம் வரை கதிர்காமர் கொலையை நியாயப்படுத்தி சூசகமாக எழுதின.

சர்வதேச ரீதியாக எழுந்த பாரியளவிலான கண்டனங்களை சமாளிக்க முடியாத நிலையிலேயே இரண்டு வருடங்கள் பேச்சுவார்த்தை எதிலும் பங்குபற்றாத புலிகள் நெருக்கடிகளில் இருந்து தவறுவதற்கும் நழுவிக் கொள்வதற்குமாக தற்போது யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றி பேசுவதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவ அகங்கார கனவை நிறைவு செய்வதற்கு இந்தப் பேச்சுவார்த்தையில் இடமிருக்கிறதா என்பதிலேயே புலிகள் அக்கறை கொண்டுள்ளார்கள்.

மாற்றுக் கட்சிகளை படுகொலைகள் மூலம் முற்றுமுழுதாக துடைத்தொழிப்பதற்காக நாளும் பொழுதும் படுகொலை செய்யும் புலிகள், நோர்வேயின் அனுசரணையுடன் மிச்சம் மீதியாக இருப்பவர்களை வெளியேற்ற முடியுமா என்று நப்பாசை கொண்டுள்ளார்கள்.

துணைப்படை என்ற பதத்தின் கீழ் ஏற்கனவே ஜனநாயக வழிக்கு வந்து செயற்படும் கட்சிகளையும், புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து மட்டு-அம்பாறை பகுதியில் செயற்படும புலிகளின் கருணா அணியினரை முடக்குவதற்கும் இப் பேச்சுவார்த்தையில் ஏதாவது வழியிருக்குமா என்பது இவர்களின் அக்கறையாகும்.

ஆண்டையின் வார்த்தை அடிமையூடாக வெளிப்பட்டது போல ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. யுத்த நிறுத்தம் ஆரம்பித்து 30 நாட்களுக்குள் துணைப்படையினரை வெளியேறறியிருந்தால புலிகளின் கிழக்கு அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் கொல்லப்பட்டபோது பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் தற்போதைய பிரச்சினை எழுந்திருக்காது என்று ஊடகங்களுக்கு சரமாரியாக பேட்டியளித்தார்.

ஜோசப் பரராஜசிங்கம் தனது எஜமானர்கள் போலவே மாற்றுக் கட்சிகள் செயற்படுவது தொடர்பாக பீதி கொண்டுள்ளார். இவர் முன்னர் அங்கத்துவம் வகித்த கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன், மதிமுகராசா, போன்றவர்கள் குரூரமாக புலிகளால் படுகொலை செய்யப்பட்டது பற்றி என்ன கருதுகிறார்? இவர்கள் ஒவ்வொருவரும் கொல்லப்பட்டபோது மனதுக்குள் மத்தாப்பு மகிழ்ச்சியாகத்தான் இருந்திருக்கிறது என்பதை இன்றைய இவரின் மாற்று ஜனநாயகக் கட்சிகளுக்கு எதிரான, அவற்றை துணைப்படைகள் என்ற பெயரில் வடக்கு கிழக்கில் இருந்து வெளியேற்றுவதற்கான அக்கறையை அவர் புலிகள் சார்பாக காட்டுவதிலிருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

வேறொன்றும் இல்லை எதிர்காலத்தில் கிழக்கில் தேர்தல் வந்தால் மக்கள் அபிப்பிராயம் வேறு மாதிரி இருந்து விடுமோ என்ற பேரச்சம் புலிகளுடன் சேர்ந்து ஜோசப்பையும் தொற்றிக் கொண்டுவிட்டது.

ஜனநாயகம், மனித உரிமை இல்லாத சமூக நிலைமைகளை நாகரீகமான மனிதர்கள் அவர்களே பெரும்பான்மையினர் அதிக காலம் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

## ரேலங்கி செல்வராஜா.....................

01ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா அவர்களை கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் வைத்து கொல்ல முயன்றனர். அத் தாக்குதலில் ஜனாதிபதி சந்திரிகா ஒரு கண்ணை இழந்தார்.

ஆயிரக்கணக்காக சமூகத்தின் விடுதலைக்காக போராட புறப்பட்ட பெண்கள் வீதிகளிலும், வீடுகளிலும், புலிகளின் சித்திரவதை முகாம்களிலும கொல்லப்பட்டனர். புலிகள் சிறுவர் சிறுமியரை வெடி குண்டுகளாக மாற்றி அவர்களது உயிரையும் காவு கொண்டனர்.

தற்போது ஒன்பது மாதக்குழந்தையின் தாயான ரேலங்கி அவர்களுக்கும் அவரது கணவர் முன்னாள் புளொட் அங்கத்தவர் செல்வராஜா அவர்களும பலிகொள்ளப்பட்டிருக்கிறார்கள். தாமும் தமது வாழ்வும் தமது அபிப்பிராயமும் என்று வாழ்நதவர்களுக்கு இந்த குரூரம் நிகழ்ந்துள்ளது. இந்தப் படுகொலைகள் எமது சமூகத்தைப் பீடித்த பெரும் சாபமாகும்.

ரேலங்கி செல்வராஜா தம்பதியினரின் உறவினர், உற்ற சுற்றத்தவர் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி– பத்மநாபா

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2005 யூன் 19 சென்னைத் தியாகிகள் தின நிகழ்வில் தோழர் ஜெயகாந்தனின் உரையிலிருந்து....

கொல்லப்படுவது எங்களுக்கு பெரிய விஷயமல்ல.

கொல்லுவதுதான் எங்களுக்கு சிரமமான விஷயமேயொழிய கொல்லப்படுவது எங்களுக்கு பெரிய விஷயமல்ல.

விடுதலை எதிலிருந்து விடுதலை?

மிருக குணத்திலிருந்து மனித குலத்திற்கு விடுதலை

வஞ்சகத்தனத்திலிருந்து ழனிதருக்கு விடுதலை

ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தோடு எனக்கு அந்தக் காலத்திலிருந்தே தொடர்பு உண்டு. எனக்கு புலிகளோடு தொடர்பு இருந்ததே கிடையாது. அவர்களுக்கு என்னை தெரிந்திருக்கிறது. எனக்கும் அவர்களை தெரிந்திருக்கிறது.

துப்பாக்கித் தூக்கியவர்கள் எல்லாம் பயங்கரவாதிகள் அல்ல. புரட்சிக்கும் பயங்கரவாதத்துக்கும் வித்தியாசம் தெரிய வேண்டும். புரட்சி என்பது மனிதர்களை காப்பாற்றுவதற்காக, மனிதாபிமானத்தின் பெயரால் ஒரு நிர்ப்பந்தத்தில் ஆயுதம் தூக்குவது. ஆயுதமே இலட்சியமல்ல. அதுவே தீர்வும் அல்ல. தூய தெளிவும், உள்ளத்திலே அன்பும் இருக்க வேண்டும். அது துப்பாக்கித் தூக்குபவனுக்கு இல்லாவிட்டால் இதயத்தை கழற்றி விட்டு, அல்லது மாற்றிவிட்டுத்தான் யூனிபாரத்தை அணிய வேண்டும்.

சுடு என்றால் சுட வேண்டும். புரட்சிக்காரர்கள் அப்படியல்ல. அவர்கள் இதயத்தோடு இதயமற்ற சமூதாயத்தோடு அவர்கள் போராடிக்கொண்டிகிறார்கள். அவர்கள் இதயத்தை இழந்து விட முடியாது.

எமக்கெல்லாம் அன்புக்குரியவர்கள், இனியவர்கள். அவர்களுக்கு குறிபார்த்து சுடத் தெரியாது. ஏனென்றால் பெரிய மாவீரர்கள் அல்ல. அவர்கள் மௌனமான மனிதர்கள். புரட்சி என்பது வருங்காலத்தில் ரத்தம் சிந்தாமல் நடத்தப்பட வேண்டும். துரதிஷ்டமாக எங்கள் புரட்சி இரத்த வெள்ளத்தில் உருவாயிற்று. இதற்குப் பொருள எங்களை பின் தொடர்ந்து இன்னும் பல நாடுகளிலே ஏற்படப்போகும் புரட்சிகள் அனைதத்தும் இரத்த வெள்ளத்தில்தான் வரவேண்டும் என்பது அல்ல.

இன்னும் சொல்லப்போனால் கம்யூனிஸ்டுக்களான நாங்கள், புரட்சியின் முன்னோடிகளான நாங்கள் இரத்தம் இல்லாமல் துப்பாக்கி இல்லாமல் அந்த புரட்சியை அடைய முடியும் என்றால் எங்களைவிட மகிழ்ச்சியடைபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

எனவே துப்பாக்கித் தூக்குகிறவனுக்கும் நமக்கும் துப்பாக்கியையே நம்பியிருக்கின்ற எமது எதிரிகளுக்கும் வித்தியாசம் தெரிய வேண்டும். ஆம். ஒரு பயங்கரமான சோதனை அது. அதனால்தான் இந்த தேசம் ஆயுதத்தையே மறுத்தது. இதெல்லாம் எதனால். ஆயுத அரசியலை ஏற்றுக்கொள்ள முடியாது. அசோகன் காலம்தொட்டு அகிம்ஷை வழியில்தான், அன்பு வழியில்தான் எம்முடைய பக்கத்து வீட்டுக்காரனை அரவணைத்துக் கொண்டுதான் வாழ முடியும் என்று புதிய அரசியலை உலகுக்கு கொடுத்தது இந்தியா. பஞ்சசீலம் வகுத்தது யார்? இந்த காலத்தில் நம் காலத்தில் அசோகன் அவதாரம் போன்று நமக்கு கிடைத்த ஜவர்கலால் நேருவினால் அது சரியென முன்மொழியப்பட்டது.

அங்கேதான் பிறந்தது என்று நினைக்காதீர்கள். அந்த பஞ்சசீல அரசியலில், அந்த அகிம்சை அரசியலில், அந்த சித்தாந்தத்தில் விளைந்த வித்து. மகாத்மாகாந்தி அந்நியரிடம் இருந்து நாட்டை வெல்ல முடிந்தது.

நான் வளர்ந்தது கம்யூனிஸ்ட் கட்சி. எல்லாம் தெரிந்து கொண்டது அங்கேயேதான். அங்கேயே எனக்கு இடித்தது. ஆயுதத்தை என்னால் நம்ப முடியாது. இது எல்லோருக்கும் புரியாது. ஆயுதம தூக்க வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஆனால் கோபத்துக்கு ஆயுதம் தூக்கு. நீயாரை எதிர்த்து தூககுகிறாயோ அதே ஆகிவிடாதே. ஆபத்து நிறைந்திருக்கும்.

**கொல்லப்படுவது எங்களுக்கு பெரிய விஷயமல்ல.**

கொல்லுவதுதான் எங்களுக்கு சிரமமான விஷயமேயொழிய கொல்லப்படுவது எங்களுக்கு பெரிய விஷயமல்ல.

யார் வீரர்கள் என்று பார்த்துக் கொள்வோம். துப்பாக்கிகளோடு திரி



கிற தனக்கு ஆபத்து என்றால் விஷக்குப்பியை கழுத்தில் கட்டிக்கொண்டு இருக்கிற நீ வீரனா. எதிரிகள் வந்தால் கூட பேனாவைத்தவிர ஆயுதத்தை என்னால் தொட முடியாது என்று உனனால் சுடப்படுகிற நான் வீரனா? செத்தவர்கள் ஜெயித்தார்கள்.

யேசு கிறிஸ்து இறைவா! அன்று அவருக்கு பாடம் கற்பித்தவர்கள் என்னை வைத்து சிலுவையில் அறைந்தால் ஆண்டவனின் பெயரால் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக அடி என்று சொல்லுவேன்.

கொல்லுவேன், தற்கொலை செய்து கொள்வேன் என்றால் ஆயுதம் ஏந்தியவர்கள் யாருக்காக? நாங்கள் கூட ஆயுதம் ஏந்தியதுண்டு. ஒரு துப்பாக்கியை வைத்துக்கொண்டு நான் பட்டபாடு. அதை சைக்கிளில் கொண்டு செல்லும் போது, சைக்கிள் ஓட்டத்தெரியாது. என்னிடம் துப்பாக்கிக் கொடுத்தால் புரட்சி உருப்படுமா? அதையும் என்னிடம் இருந்து வேறொருவன் தூக்கிக் கொண்டு போய்விட்டான். அதிலிருந்த புல்லெட்டை கழற்றி வைத்துவிட்டேன் எண்ணத்துக்கு இது வம்பு. அது தானாகவே சுட்டுவிடுமாம். மற்றது எல்லாம் தானாக சுடாது. துப்பாக்கி தானாக சுட்டுவிடும். சுத்தமாக்கிக் கொண்டு இருக்கும் போது சுட்டுவிடும். அது நம்முடைய தொழில் அல்ல. சிலருக்கு அது அருவருப்பான விடயம்.

### விடுதலை

விடுதலை எதிலிருந்து விடுதலை?

மிருக குணத்திலிருந்து மனித குலத்திற்கு விடுதலை

வஞ்சகத்தனத்திலிருந்து மனிதருக்கு விடுதலை

வறுமையிலிருந்து மனிதர்களுக்கு விடுதலை

அதனால்தான் மகாகவி பாரதி தன்னை கம்பதாசன் என்றோ வள்ளுவதாசன் என்றோ சொல்லவில்லை. செல்லிதாசன் என்று அழைத்துக்கொள என்றார்.

ஈழத்து சகோதரர்களே இந்த தரைக்கு மேல் 27,000 மொழி பேசுபவர்கள் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு பகைவன் சிங்களவனா? நெஞ்சிலே கை வைத்து சொல்லுங்கள். உங்களை இந்த கோலத்துக்கு ஆளாக்கி பிறந்த மண்ணை விட்டு, வேரை அறுக்க வைத்து, உலகம் பூராவும் பிரிந்து செல்க என சாபம் இட்டது போல் அனுப்பி வைத்திருக்கிறதே அது எது?

எல்லோரும் வெளிநாட்டுக்கு போவதுண்டு. நீங்கள் எப்படி போயிருக்கிறீர்கள். அறிவால், ஆற்றலால், தகுதியால், எங்கள் பெருமைகளை உலகத்துக்கு உரைப்பதற்கு, இல்லாவிட்டால் உழைப்பால் சிங்கப்பூரையும், மலேசியாவையும் போல் உருவாக்குவதற்காகவா?

சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் தமிழுக்கு அந்தஸ்த்து கேட்கலாம். அரசு மொழியாக்கலாம் தனிநாடு கேட்டீர்கள் என்றால் தொலைந்திடுவீர்கள். ஜாக்கிரதை. இந்த யுக்தி வேண்டாம்.

தனிநாட்டையும் அதாவது பிரிவினைவாதத்தையும், ஆயுதம் தாங்கிய அரசியலை இந்தியா போற்றும், புகழும், வழிபடும், உடுக்கு அடித்து வழிபடுபவர்கள் மாதிரி ஒருபோதும் இந்தியா பின்பற்றாது. தன் பிள்ளைகளை அந்த வழிக்கு அனுப்ப மாட்டாது.

அதனால்தான் தமிழ் இளைஞர்களை காப்பாற்றுவதற்கு பிரிவினை ஒழிக என்றும் குரல் கொடுத்து பிரிவினைவாதத்தை தடைசெய்து அண்ணாத்துரையை ஜனநாயகவாதியாக ஆக்கியவர்கள் நாங்கள். அது எங்களுக்கு பெருமை.

நாம்தான் சாகத் துணிந்தவர்கள். பத்மநாபா கொல்லப்படவில்லை என்றால் நான் கூட நினைவில் வைத்திருக்கமாட்டேன்.

நாங்கள் கொல்லப்படவே பிறந்தோம். மானம் இழந்து தமிழர்கள் என்ற பெயரில் தடுக்கி வீழ்ந்து வெறிகொண்டவனாக உலகம் காறி துப்புகிறவனாக சாகிறவர்களை விட உங்கள் குண்டுகளுக்கு பலியாகி இறந்தவர்கள் சிறந்தவர்கள், உயர்ந்தவர்கள் நாங்கள்.

**என் நண்பன் எங்களை நம்பியவன் இந்தியாவின் தனி சிறந்த நண்பன் பத்மநாபா.**

அங்கு தமிழீழம் கிடைக்கப்போகிறது? அது என்ன தமிழீழம்? மயானமா? சுடுகாடா? இதுதான் புரட்சியோ. இதுதான் விடுதலையோ?

எங்கள் நண்பர்கள் என்ற ஒரே காரணத்துக்காக உங்கள் சகோதரர்கள் உங்களை கொன்றார்கள். உங்களைக் காப்பாற்ற முடியவில்லையே. ஐயோ என்று மட்டுதான் கூற முடிந்தது.

# காத்தான்குடி இன்னுமொரு ஜாலியன் வாலாபாக்

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள் நிகழ்ந்து 15 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்கள் புலிக் கொலை வெறியர்களால் மசூதிக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்ட தினம் கறுப்பு ஆகஸ்ட் 03.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அமைதியாக பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் திடலில் கூடியிருந்த மக்கள் மீது பிரித்தானிய ஜெனரல் டயர் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற படுகொலைகளுக்கு எந்த விதத்திலும் இது குறைந்ததல்ல.

இந்த தமிழ் மேலாதிக்க காட்டுமிராண்டித்தனத்தையிட்டு நாகரீகமான தமிழர்கள் கூனிக்குறுகி அவமான உணர்ச்சியால் சிறுத்துபோன தினம் இது. இந்தப் படுகொலை புலிகள் எத்தகைய கொடூரமான ஒரு புலிராச்சியத்தை நிறுவ முயல்கிறார்கள் என்பதற்கு கட்டியம் கூறிய நிகழ்ச்சிகளில் ஒன்று.

கடந்த ஜூலை 27 வெலிக்கடை படுகொலையின் 15வது ஆண்டு நினைவு தினம். அன்றைய சிங்கள கிரிமினல் ஆட்சியாளர்களின் குற்றச் செயலுக்கு எந்தவிதத்திலும் இந்தப் படுகொலை குறைந்ததல்ல.

தசையும், இரத்தமும் பள்ளிவாசல சுவர்களிலும், தரையிலும் சிதறிய



நாள் அது. தமிழர்களின் போராட்டத்தின தார்மீக தகுதிபற்றியும் கேள்வி எழுப்பிய நாள் அது.

மனிதாபிமானம் சமூக உறவுகளை நேசித்த தமிழர்களை கொன்றொழித்து புலிகளின் பாசிச நிர்மாணம் நிகழ்ந்த காலத்தில் அரங்கேற்றப்பட்ட படுகொலை இது.

தமிழர்களின் அரசியல் ஜனநாயகமயப்படுத்தப்படுவது தமிழ் முஸ்லீம் மக்களின் பாதுகாப்பிற்கும் உறவுகளுக்கும் அவசியமானது. என்பதை காத்தான்குடி படுகொலை மௌனமாக பறைசாற்றி நிற்கிறது.

நன்றி:- தமிழ்நியூஸ்வெப்
03-08-2005

# ஊடகக் குரூரம்

தினமுரசு பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த சூரியப்பிள்ளை நிக்ஷனின் மரணத்தை தமிழ் நெட் இணையத்தளமும், நிதர்சனம் டொகொம் இணையத்தளமும் சித்தரித்திருந்த விதம் அந்த ஊடகங்களின் காட்டுமிராண்டித்தனத்தை அம்மணமாக பிரதிபலித்தது.

மிகவும் குரூரமான முறையில் நிகழ்த்தப்பட்ட அந்தப் படுகொலையின நிழல் படங்கள் பல்வேறு கோணங்களில் நிதர்சனம் டொட் கொம்மில் இடம்பெற்றிருந்தது. அது புலிகளுக்கு எதிரான மாற்றான நிலைப்பாடு கொண்டவர்களை அச்சுறுத்தும் விதமாகவும், இறந்தவரை இழிவுபடுத்தும் விதமாகவும் செய்தியையும் உள்ளடக்கியிருந்தது.

பத்திரிகையில் எழுதுபவர்கள் மாத்திரமல்ல, பத்திரிகை விநியோகிப்பவர்களும் ஊடகத்துறையின் பிரிக்க முடியாத அங்கததவர்களே. ஆனால் பத்திரிகை வீதியில் சிதற காதால் இரத்தம் வடிய நிர்மலமான முகத்துடன் வீதியில் வீழ்ந்துகிடந்த அந்த 21 வயது இளைஞனை ஈபிடிபி கும்பலின "பருத்தித்துறை வேட்பாளர்" என நிதர்சனம் டொட் கொம் தனது எழுத்தில் தாஷித்திருந்தது. இது அந்தக் கொலையை பகிரங்கமாக நியாயப்படுத்தும, மற்றவர்களை அச்சுறுத்தும் செய்தியாகும்.

இதேபோல் படுகொலை செய்யப்பட்டவரை "ஈ.பி.டி.பி துணைப்படை அங்கத்தவர், தினமுரசு பத்திரிகை விநியோகிப்பவர்" என தமிழ் நெட் இணையத்தளம் குறிப்பிட்டிருந்தது. இதுவும் இந்த படுகொலையை நியாயப்படுத்தும் ஒரு செய்தியாகும்.

ஆனால் சுதந்திர ஊடகக்காரர்கள் இப்படுகொலை பற்றி இதுவரை எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை. இது துரதிஷ்டமானது. பிரான்சில் உள்ள எல்லைகடந்த பத்திரிகையாளர் அமைப்பிற்கும் யுனெஸ்கோவிற்கும் இந்த செய்திகளின் காட்டுமிராண்டிததனத்தை கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். இது சர்வதேசம்வாழ் நாகரீகமான ஊடகவியலாளர்களினதும், மாற்று தமிழ் ஊடகவியலாளர்களினதும், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மாற்று அரசியல் கட்சிகளினதும் கடமையாகும்.

"தமிழர்கள் அனைவரும் நிர்வாணம் கொண்டு தெருக்களில் திரிக"

**சேரனின் கவிதை வரிகளில் இருந்து.**

நன்றி:- 'தமிழ்நியூஸ்வெப்'
29-07-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தவாதிகளும் யுத்த வியாபாரிகளும் இம்முறை யுத்தம் ஏற்பட்டுவிடவேண்டும் என ஆர்வம்

நோர்வேயின் சமாதான நடவடிக்கைகள் தோல்வியடைந்துவிட்டனவா? என்ற தலைப்பில் கடந்த 24.07.2005 திகதிய வீரகேசரி வாரமலரில் சட்டத்தரணி இ.தம்பையா எழுதிய கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

"அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகிறது இரண்டு தரப்புக்கும் உடனடியாக இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இன்னொரு விடயம் தென்படுவதாக இல்லை.



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மீண்டும் போரை ஆரம்பிக்குமாறு கோரி வடமராட்சி கிழக்குப் பகுதி பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம். இவ்வாறான போராட்டங்கள் இவ்வாரம் முதல் வன்னியிலும் இடம்பெறவுள்ளன. இவ்வாண்டு போராண்டாகவும் தேசிய எழுச்சிப் பேரவையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (படப்பிடிப்பு ...)

இதனால் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நோர்வே செய்யப்போவதென்ன? அந்த சமாதான நடவடிக்கைகள் என்னவாகப் போகின்றன?

சமாதான நடவடிக்கைகளில் இவ்வாறான பின்னடைவுகள் ஏற்படுவது வழமை. இந்நிலைமையை சரிசெய்து கொண்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறும் வழமையான, பொதுவான ஆறுதல்களை இந்நாட்களில் கேட்க முடியவில்லை. மாறாக யுத்தம் மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற பேச்சையே கேட்க முடிகிறது.

யுத்தவாதிகளும் யுத்த வியாபாரிகளும் இம்முறை யுத்தம் ஏற்பட்டுவிட வேண்டும் என்று ஆவலாய் இருக்கின்றனர். பேரினவாதிகளும், சுயநல நோக்கங்கொண்ட அரசியல் வக்கிரங்களையும், காழ்ப்புணர்வுகளையும் கொண்ட சில தமிழ் குழுக்களும் மீண்டும் யுத்தம் வரவேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர்.

கடந்த மூன்றரை வருடம் அமைதியான தனிப்பட்ட வாழ்க்கையை மிகவும் சௌகரியமாகக் கொண்டு நடத்தியவர்கள் எவ்வகையிலும் இனியொரு மோதல் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதுகின்றனர்."

யுத்தம் ஏற்பட்டுவிடக்கூடாதென்ற சாதாரணமக்களின் மனநிலையை சரியாகவே கூறியிருக்கும் சட்டத்தரணி இ.தம்பையா சுயநல நோக்கங்கொண்ட அரசியல் வக்கிரங்களையும், காழ்ப்புணர்வுகளையும் கொண்ட சில தமிழ் குழுக்களும் மீண்டும் யுத்தம் வரவேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர் என்று எழுதியுள்ளார்.

இதனை ஏகபிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி வரும் புலிகள் கூறுவது விளங்கிக்கொள்ளப்படக் கூடியதே ஆனால் இந்த நாட்டின் உண்மையான இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் ஒரு கட்சியின் தலைவர் (அவரது பாஷையில் குழுவின் தலைவர்) இந்தக் கட்டுரையில் யுத்த முனைப்பு எங்கிருந்து தொடங்குகிறது, என்ற உணமை நிலையை வெளிக்கொண்டு வந்து இதையிட்டு மக்களை விழிப்படையச் செய்வதற்குப் பதிலாக வேறு திசையில் தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இவர் இந்த கட்டுரையை எழுதுவதற்கு முன்பாகவே புலிகளின் உத்தரவுகளுக்கமைய யாழ் பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடிய வெகுஜன ஒன்றியப் பிரதிநிதிகள் என்ற பேரில் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் புலிகளின் ஆதரவாளர்களும், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் "பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா" என்றும் "போருக்கு ஆணையிடுங்கள் தலைவா" என்றும் பகிரங்கமாகவே கூட்டம் கூடி தீர்மானம் நிறைவேற்றுவதுடன் இதனை வலியுறுத்த ஊர்வலங்களையும் நடாத்திவருகின்றனர். இவை எவற்றையும் அறியாதவர் போல யுத்தவியாபாரிகள், பேரினவாதிகளையும் அடைமொழிகளுடன் தமிழ்க் குழுக்களையும் விளாசியுள்ளார்.



புலிகள் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கிறார்கள், சமாதானத்தில், ஜனநாயக நடைமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு பொய்த் தோற்றத்தை இந்த பிரகடனங்கள், மகஜர்கள், ஊர்வலங்கள் மூலம் காட்டி வருகிறார்கள் இவற்றை விளங்கிக்கொள்ள முடியாதவர் அல்ல இந்தக் கட்டுரையாளர்.



28.06.2005

பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா!

தீவக மக்கள், தலைவர் பிர...

பொறுத்தது இனிப் போதும் போரைத் தொடங்குங்கள்!

...கிழக்கு மக்கள் தேசியத் தலைவருக்கு மகஜர்

தமிழர் உரிமைகளைக் காக்க விடுதலைப் போரே ஒரே வழி!

...ழ். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வ...

ஆனால் இவற்றுக்கு எதிராகக் கருத்துச் சொல்லும் துணிச்சலின்றி வேறு திசையை நோக்கி குற்றச் சாட்டுக்களை முன்வைத்துள்ளார். அத்துடன் புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை கொச்சையாக அவர் குறிப்பிட்டிருப்பதில் யுத்தத்திற்கு எதிரான தனது கருத்துக்களை புலிகள் தவறாக எடுத்துக் கொண்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு மேலோங்கியிருப்பதையே காணமுடிகிறது.

கந்தன் வந்தான் என்றும் கந்தசாமி வந்தார் என்றும் பெயர் சூட்டுவதிலும், அவர்களுடனான தொடர்பாடலிலும் பாகுபாடு காட்டிவரும் சமூகத்தின் தொன்று தொட்டுவரும் நடைமுறையை அடியொற்றியதாகவே இங்கு பல அறிவுஜீவிகள், ஊடகவியலாளர்கள், சமூகத்தின் பெரியமனிதர்கள் என்று கருதப்படுபவர்களின் போக்கு இருந்து வருகிறது.

அதிகார பலம், பணபலம், என்பவற்றின் முன்னால் ஒருவிதமாகவும் அது இல்லாதவர்களிடம் வேறொரு விதமாகவும் நடந்துகொள்ளும் வேறுபட்ட அணுகுமுறை எமது சமூகத்தின் பண்பாடாகியுள்ளது. அவ்வாறே புலிகளின் ஆயுதங்களின் முன்னால் ஒருவிதமாகவும் அதாவது பாம்பிலும் நோகாமல் தடியிலும் நோகாமல் அடித்துக்கொண்டிருக்கும் அதே வேளை ஆயுதங்களை கீழே வைத்துவிட்ட கட்சிகள் விடயத்தில் இளகிய இரும்பைக் கண்ட கொல்லன் போலவே நடந்துகொள்கிறார்கள்.

இடதுசாரிக் கட்சி ஒன்றின் தலைவரான சட்டத்தரணி தம்பையா அவர்களின் கூற்றுகளும் இவற்றுக்கு சற்றும மாறுபட்டதாக இல்லை. பணபலம், அதிகாரபலம், குடிப்பிறப்பு என்பவற்றை வைத்தே எடைபோடும் எமது சமூகத்தின் இழிந்த களிசடை மனோபாவத்தின் பிரதிபலிப்பிலிருந்து இவர்களும் விடுபடவில்லை.

இங்கு இடம்பெறும் வன்முறைகள், படுகொலைகள், தாக்குதல்கள் அனைத்தையும் திட்டமிட்டு மேற்கொள்ளும் புலிகள் உலகை ஏமாற்ற சமாதானத்தை விரும்பாத சக்திகளே அவற்றை மேற்கொள்வதாக தொடர்ந்து கூறிவருகின்றனர். சமாதானத்திற்கு எதிரான தீயசக்திகள், துணை இராணுவம் என்ற பதங்களிற்குள் மாற்று தமிழ் அரசியல் கட்சிகளை உள்ளடக்கி அவர்களது அடிப்படை அரசியல் உரிமைகளை நிராகரிக்கும் தமது போக்கை நியாயப்படுத்தி, தமது ஏகபிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதே புலிகளின் நோக்கும், போக்குமாக உள்ளது.

உண்மைக்கு மாறாக, இதற்கு வலுச்சேர்ப்பதாகவே சட்டத்தரணி தம்பையா அவர்களின் கருத்தும் உள்ளது. இவையும் சமாதான முயற்சிகளின் முன்னோக்கிய நகர்வை மறைமுகமாகத் தடைசெய்கின்றன. இன்றைய காலகட்டத்தில் சமாதானத்தை நேசிப்பவர்கள் இதையிட்டே வருந்த வேண்டியுள்ளது.

# மானிட உணர்வுகள் அழிவுறும் போது.......

சிங்கள பேரினவாத அடக்கு முறைகளுக்கு எதிராக மனித சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஈழ விடுதலைப் போராட்டம் இன்று தமிழ் மக்களை விலங்கு நிலைக்கு இழுத்துச் செல்லும் போராட்டமாக மாறியுள்ளது. தமிழ் மக்களிடம் விலங்குணர்வுகளை தூண்டிவிடுவதன் மூலம் மானுட உணர்வுகளான விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, அன்பு, கருணை, இரக்கம், சிந்திக்கும் ஆற்றல், பகுத்தறிவு தன்மையும் மற்றவரை நேசித்தல் போன்றவற்றை மரத்துப் போகச் செய்து புலிகள் தமது அதிகாரத்தை மட்டும் நிலை நிறுத்துவதற்காக தமிழ் மக்களை விலங்குகளாக மாற்றுவதற்கு பகீரத பிரயத்தனம் செய்து கொண்டிருக கிறார்கள்.

இன்று புலிகளுக்கு வேண்டுவனவெல்லாம் தமது சொல்லை மட்டும் மந்திரமாக கேட்டுத் தலையாட்டுபவர்களேயொழிய மனித சுதந்திரம் பற்றியோ, அல்லது மனித சமத்துவத்தை பற்றியோ சிந்திக்கும் மக்களல்ல. அவ்வாறு யாரும் மீறி சிந்திப்பவர்களாக இருந்தால புலிகள் அவர்களுக்கு இலகுவாக இடும் பெயர் தேசத் துரோகியாகும். இந்த தேசத் துரோகி என்னும் பட்டத்தை பெறுவதற்கு நெஞ்சுரமற்றவர்கள் வாய்மூடி மௌன விரதம் அனுஷ்டிக்கும் அதேவேளை தேசத்துரோகியாகி மானுட நேயத்துக்காக மரணத்தை தழுவியவர்களாலும் மரணத்தின் வாசலில் இன்றோ, நாளையோ என வாழ்ந்து கொண்டிருப்பவர்களாலுமே ஈழத் தமிழினம் தனது மானிட உணர்வுகளை சிறிதளவாவது வெளி உலகத்திற்கு காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று புலிகள் தமது போராட்டத்தைப் பற்றியும், தமது தலைமை பற்றியும் சர்வதேச நாடுகள் மெச்சி மூக்கின் மேல் விரலை வைக்கின்றது எனத் தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனால் சர்வதேச நாடுகளோ, சர்வதேச பொதுத்தாபனங்களோ விடுதலைப் புலிகளால் விலங்கு நிலைக்கு வழிநடத்திச் செல்லப்படும் தமிழ் மக்களிடம் எவ்வாறு மானுட உணர்வுகளை மீளக்கொண்டு வரலாம் என ஆய்வுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துகின்றன. அத்துடன் புலிகளையும் அவர்களது மக்களையும் விலங்குகளாக மாற்றும் நடவடிக்கைகளையும், வக்கிர குணாம்சங்களையும் எவ்வாறு தடுக்கலாம் என ஆராய்ந்து வருகின்றன.

அதனடிப்படையில் புலிகளிடம் இக் குணாம்சங்களை ஒரேயடியாக மாற்ற முடியாது. சிறு பிள்ளைகளிடம் எவ்வாறு மானுட உணர்வுகளை மெல்ல மெல்ல வளர்க்க முடியுமோ அதே மாதிரித்தான் புலிகளிடமும் அவர்களின் வழியில் சென்று மெல்ல மெல்லமாக மானுட விரோத செயற்பாடுகளை குறைத்துத் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் யுத்த நிறுத்த காலத்தில் புலிகளால் மேற்கொள்ளப் படும் மானுட விரோத செயற்பாடுகளை நோக்குகின்றன.

ஆனால் உண்மை நிலை புரியாது. சில புத்தி பேதலித்தவர்களும் தமது பெயர்கள் பத்திரிகைகளில் பெரிய எழுத்தக்களில் வெளிவர வேண்டும் என்ற நப்பாசை கொண்டவர்களுமே இன்று புலிகளுக்குக் கொடி பிடிப்பதும், புலிகளின் கோஷங்களை உரக்கக் கூப்பாடு போடுவதுமாக அலைகின்றனர். இதில் வெட்கக்கேடானது யாதெனில் சில மதத்தலைவர்களும் மேடையேறி கோஷம் போடுவதும் புலிகளின் செயற்பாடுகளுக்கு வக்காலத்து வாங்குவதும் தான். "தன்னைப் போல் அயலானையும் நேசி". என்ற மனித உணர்வின் ஆழத்தையே வார்த்தையாக்கிய கிறிஸ்த்தவ சமயத்தை சேர்ந்த குருமாரும் சிலர் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாவதற்காய் தன் இனச் சகோதரனையே கொன்றொழித்த இன்னும் கொன்றொழித்துக் கொண்டிருக்கின்ற புலிகளின் மேடையில் ஏறி புலிகளை நியாயப்படுத்துவது எதற்காக என்று கிறிஸ்த்தவ மதத்தை பின்பற்றும் மக்களுக்கு புரியாத விடயமாக உள்ளது.

புலிகளின் மனித விரோத செயற்பாடுகளை கண்டித்தால் யாரும் உயிர் வாழ முடியாது. அதற்காக புலிகளின் மனித விரோத செயற்பாடுகளை வரவேற்று மேடையில் பேசுவதற்கு இவ்வாறு மனச்சாட்சி எவ்வாறு இடம் கொடுத்தது.

பகைமையற்ற முறையில் எவ்வாறு தீர்ப்பது, வன்முறையற்ற வழியில் எவ்வாறு உரையாடுவது, சமாதானத்தை எப்படி மனங்களில் வரவழைப்பது போன்ற மனித உணர்வுகளில் பயிற்சி அளிப்பதற்கு சர்வதேச பொதுத் தாபனங்களில் முயற்சிகள் செய்து கொண்டிருக்கின்றன. அதன் விளைவாகவே தற்போது பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் சமூக சேவையாளர்களுக்கும் பல கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் மேற்கொண்டுவருகின்றன. அதன்மூலம் இளம் சந்ததியினரை புலிகளின் விலங்குணர்வூட்டும் செயற்பாடுகளில் இருந்து பாதுகாப்பளிக்கலாம் என சர்வதேச தாபனங்கள் நம்புகின்றன.

ஆனால் புலிகள் விட்டேனா பார் என்று தற்போது பல சிறுவர்களை பலவந்தமாக கடத்திச் சென்று விலங்குணர்வு கொண்டவர்களாகவும், கொலைவெறி கொண்டவர்களாகவும் மாற்றுவதன் மூலம் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் என்ன காட்டுமிராண்டிகளா?



தூதரைக் கொல்லுதல், பாவம் என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் நாம் அவதானிக்கும் ஒரு பண்பாடு. ஆனால் இங்கு நிகழ்ந்தது என்ன?

யாழ் இணுவிலில் உள்ள சலூன் ஒன்றில் முடிவெட்டச் சென்ற படை வீரருடன் சென்ற மற்றைய படையினர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சலூன் தொழிலாளி ஒருவர் பலியானார். இன்னுமொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தையடுத்து அந்த சுற்றாடலில் பதட்டமான சூழ்நிலையொன்றை புலிகள் ஏற்படுத்தினர். இப்பதட்டத்தை தணிக்கும் நல்ல நோக்கத்தில் அவர்களுடன் பேசி பதட்டத்தை தணிக்கலாம் என முழுமையாக நம்பி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த வயது முதிர்ந்த பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தனா- 60, புலிகளால் தந்திரமாக கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரது சீருடை களையப்பட்டு சாரம் அணிவிக்கப்பட்டு, அடி, வெட்டு, சித்திரவதை காயங்களுடன் முகம் மூடப்பட்ட நிலையில் சுதுமலையில் பாதையோரமாக அநாதரவாக அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அவருக்கு நேர்ந்ததும், அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்ட கோலமும் புலிகள் எவ்வளவு நாகரிகமானவர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றி நிற்கிறது.

சலூனில் நிகழ்ந்த துப்பாக்கி வெடிச் சம்பவம் தவறுதலாக நிகழ்ந்தது என்றும் இராணுவத்தினர் தமது முகாமிலேயே முடிதிருத்தம் செய்ய வேண்டும் என்றும், அவர்கள் இவ்வாறு சலூனுக்கு சென்றது தவறான நடவடிக்கையென்றும், அவர்களை கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்து விட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் சுற்றித் திரியும் புலி காடையர் கூட்டம் அரசியல் கட்சிகளின் காரியாலய எரிப்பு, மர்மக்கொலைகள், பகிரங்க கொலைகள், ஆட்கடத்தல்கள், சோதனைச்சாவடிகள் எரிப்பு, வாகனங்களை சேதப்படுத்துதல், தீவைப்பு, என அராஜகம் புரிந்து வருகிறது.

பொலிஸ் அத்தியட்சகருக்கு நிகழ்ந்த சம்பவம், "பழி ஓரிடம் பாவம் ஓரிடம்" என்பது போல் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் என்ன இவ்வளவு காட்டுமிராண்டிகளா? முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களையும், பத்மநாபா, நீலன் திருச்செல்வம், அமிர்தலிங்கம், ரஜனி திரணகம போன்றவர்களையும் மக்கள்தான் கொன்றார்கள் என்று இந்த நயவஞ்சகர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உலகத்தில் எந்த விடுதலை இயக்கத்திடமும் இந்த காட்டுமிராண்டித் தனத்தை காணமுடியாது. வீரப்பன் மற்றும் சர்வதேச மா.்.பியா கும்பல்களிடம் காணப்படும் குணாம்சங்களே இங்கு காணப்படுகின்றன. தாங்களே சித்திரவதை செய்து கொன்று தாங்களே படம் பிடித்து தங்களது ஊடகங்களில காட்டி புளகாகிதமடையும் காட்டுமிராண்டித்தனம் புலிகளின் கைவந்த கலை.

இதற்கு முன்னர் தினமுரசு பத்திரிகை விற்கும் நிக்ஷன் பத்திரிகைகள் வீதியில் சிதற இரத்தம் வடிய வீழ்ந்து கிடந்த காட்சி புலிகளின் ஊடகங்களில் குரூரமாக இடம்பெற்றிருந்தது.

மக்களை அச்சுறுத்துவதற்காக மாற்றுக் குரல்வளையை நசிப்பதற்காக புலிகள் இந்த குரூர விளையாட்டில் இறங்கியிருக்கிறார்கள்.

கிழக்கிலும் வடக்கலும் நாளாந்தம புலிகளால் புரியப்படும் படுகொலை, ஆள்பிடி பற்றி மக்கள் எந்த எதிர்ப்பையும் காட்டமுடியாதளவுக்கு அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். எனினும் ஆங்காங்கே மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் உருவாகாமல் இல்லை.

இதுபோல் மன்னார், யாழ்ப்பாணத்தில் புலிகள் மீனவர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அச்சுறுத்தல், மிரட்டல் மூலம் மக்களை பணியவைக்க முயன்றார்கள். தற்போது தமது காட்டுமிராண்டித்தனங்களை மக்களின் தலையில் போடுகிறார்கள்.

அக்கிரமங்களும், அநியாயங்களும் நீடித்து நிலவியதாக வரலாறு இல்லை. மனிதர்கள் எப்போதும் கண்ணியமாகவும், நாகரீகமாகவும் வாழவே விரும்புவார்கள்.

நன்றி:- தமிழ்நியூஸ்வெப்
05-08-2005

## துக்ளக்கிலிருந்து...............

எந்த சக்தியை எதிர்த்து, தீவிரவாதிகள் இயங்க ஆரம்பிக்கிறார்களோ, அந்த சக்தி புரிந்த தீமையை விட, இந்தத் தீவிரவாதிகள் விளைவிக்கிற கொடூரங்கள்தான் அதிகம். மனித உயிர்களை கவலையற்று பழிவாங்கும் இவர்கள், மிருகங்களுக்கு சமமானவர்கள். கொடிய விலங்குகளை வேட்டையாடுவது போல இவர்களை அழிக்க வேண்டும். அதுதான் வழி. அதைச்செய்ய தீவிரவாத இயக்கங்களையும். தீவிரவாதிகளையும் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். அது நடக்கக்கூடிய காரியம் என்பதே உலக அனுபவம், அந்த நிலையில் இவர்களோடு பேரம் பேச வேண்டியதாகிறது. அது எந்த சமூகத்திற்கும் நல்லதல்ல.

ஆசிரியர் தலையங்கம்
நன்றி:- துக்ளக் 20-07-2005

*கேள்வி:- விடுதலைப்புலிகளிடம் இருக்கும் சிறிய விமானங்களால், வலிமையான இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து- என்று சொல்வது வேடிக்கையானது என்கிறாரே வை.கோ?*
*ரமேஷ்- தீர்த்தமலை*

பதில் :- எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாத ஒரு வெறியன் கையில், ஒரு சிறிய கத்தி இருந்தால், அதுவே கூட தெருவில் செல்லும் அனைவருக்கும் ஆபத்துதான். ஏதோ நாசம் விளைவித்தால் போதும் என்கிற உயர்ந்த நோக்கம் உடைய புலிகள், ஒரு "தற்கொலை விமானம்" ஏற்பாடு செய்து நமது நாட்டில் நாசம் சேதம் விளைவிக்க முடியாதா?

*கேள்வி :- புலிகளுடன் இணைந்து சுனாமி நிவாரண உதவிகளை வழங்க சந்திரிகா முன்வந்துள்ள நிலையில், அதை புத்த துறவிகள் எதிர்க்கிறார்களே இது பற்றி ?*
*எம். சேட். நத்தம்*

பதில் :- சாதாரணமாக, இலங்கையில் உள்ள புத்த துறவிகள் எடுக்கிற நிலைப்பாடுகள், விரும்பத்தகாதவையாக இருக்கும். ஆனால், இப்போது இவ் விஷயத்தில் அவர்களுடைய எதிர்ப்பு நியாயமானது.

நன்றி:- துக்ளக் 29-06-2005

# வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களை புலிகள் படுகொலை செய்ததை இலங்கையின் ஜனநாயக அரங்கு முற்று முழுதாக கண்டிக்கிறது.

## அவர்கள் விடுத்த அண்மைய அறிக்கையிலிருந்து...............

யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கும் அதேகாலப் பகுதியில் யுத்தப் பிரகடனம் செய்வது சமாதான முயற்சிகளை பின்தள்ளி சடுதியாக யுத்தத்திற்கு செல்வற்கான புலிகளின் கபட முயற்சி எனறே கருத வேண்டியிருக்கிறது.

புலிகள் கதிர்காமரை ஒரு பிரச்சினைக்குரிய ஆளாகவே சித்தரித்து வந்தனர். அதாவது அவர் ஒரு துரோகி, ஏனென்றால் அவர் ஒரு தமிழர், இலங்கை அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருந்தவர், புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை அவர் எதிர்த்து வந்திருக்கிறார். ஆறு வாரங்களுக்கு முன்புதான் கொல்லப்படலாம் என்று தெரிவித்திருந்தார்.

சுனாமி கட்டமைப்பு உடன்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் சார்பில் கதிர்காமர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் புதிய அத்தியாயம் ஒன்று உருவாகியிருப்பதாக ஒருவைபவத்தில தெரிவித்திருந்தார்.

அந்த வைபவத்தில் கதிர்காமர் தெரிவிக்கையில் புலிகளுடன் உடன்பாடு கண்டிருக்கும் அதேவேளையில் இந்த முயற்சி புலிகளும், நோர்வே அரசும் ஜனநாயகத்தை மீள் நிறுவுவதிலும், மனித உரிமைகளையும் கண்ணியமான வாழ்வையும், புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் உருவாக்குவதையும், இந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

நோர்வே அரசுக்கு அவர் தெரிவிக்கையில் இந்த ஜனநாயகத்துக்கான இயக்கம், வடக்கு கிழக்கின் சில மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதனை நோர்வே அரசாங்கத்தினால் செய்ய முடியாவிட்டால் அவர்கள் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். வேறு சக்திகள் அந்த பகுதிகளில் ஜனநாயகத்தை நிறுவுவதற்கான வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

புலிகள் ஜனநாயகத்திலேயோ, சமாதான பேச்சுவார்த்தைகளிலோ அக்கறையாக இல்லையென்பதை பேச்சுவார்த்தையின் மறு தரப்பான அரசாங்கத்தின் அமைச்சரவையின் மூத்த உறுப்பினர் ஒருவரை படுகொலை செய்ததன் மூலம் அம்பலப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை கொலை பயங்கரம், சிறுவர் சிறுமியரை பலாத்காரமாக படைக்கு அணிதிரட்டுவது, ஆட்கடத்தல், ஓயாத அரசியல படுகொலைகள என்பன தமிழர்களின் கௌரவமான வாழ்க்கையை ஈவிரககமற்ற முறையில் சீரழித்துள்ளன. ஈவிரக்கமற்ற நீண்ட கொலை பட்டியலில் தற்போதைக்கு இறுதியாக பலியாக்கப்பட்டிருப்பவர் கதிர்காமர்.

இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியினரும், நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்களும் மிக மோசமான முறையில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை புலிகளின் கையில் செல்லுமளவிற்கு கைவிட்டுள்ளார்கள்.

புலிகளின் இந்த நடைமுறை இறுதியாக சமாதானத்தை எய்துவதற்கும், ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் இந்த நாட்டில் நிலை நாட்டுவதற்கு நீண்ட இடைவெளிக்கு பின் தள்ளியுள்ளது.

கடந்த மூன்று தசாப்தமாக நடைபெற்ற புலிகளின் மாற்று அரசியல் சக்திகளுக்கு எதிரான இழிந்த யுத்தம் வடக்கு கிழக்கில் ஜனநாயகத்திற்கான கட்டமைப்புகளை நிர்மூலமாக்கியுள்ளது. சர்வதேச சமூகம் [illegible] திருக்கின்ற புலிகளின் அபிலாஷைகளான முழு அதிகாரம், ஏகபிரதிநிதித்துவம் தமிழர்களின் ஜனநாயகம், நீதிக்கான கோரிக்கைகளுடன் சம்பந்தப்படுத்தவோ, சமப்படுத்தவோ முடியாது.



புலிகள கோரியிருக்கும் இடைக்கால நிர்வாகசபை முற்றுமுழுதாக அதிகாரங்களை கேள்விக்கிடமின்றி கையளிக்கும் முறை தமிழர்களின் உண்மையான அபிலாஷைகளை புதைகுழிக்குள் அனுப்புவதாகவே அமையும்.

இந்த யுத்தநிறுத்தம் புலிகளின் திட்டமிட்ட வன்முறையினால் தொடர்ந்து அர்த்தமிழந்து வருகிறது. இதனால் பின்வரும் கோரிக்கைகளை தமிழர் ஜனநாயக அரங்கு முன்வைக்கிறது.

01. அரசியல் படுகொலைகளையும், பிள்ளைகளை யுத்தத்திற்கு படையணிகளுக்கு அணிதிரட்டுவது நிறுத்தும் வரை புலிகள் தலைவர்களின் மீது போக்குவரத்துத்தடையை அமுலுக்கு கொண்டு வருதல்.

02. பிரித்தானியாவில் இருக்கும் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் கதிர்காமர் கொலைக்கு முன் யுத்த அச்சுறுத்தல் விடுத்திருந்ததால் அவருக்கு கதிர்காமரின் கொலை பற்றி தெரிந்திருக்கலாம். எனவே பிரித்தானிய அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

03. வரம்பற்ற வன்முறைகளையும, தொடர்ச்சியான யுத்த அச்சுறுத்தலையும் புலிகள் விடுத்துக் கொண்டிருப்பதால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சீர்திருத்தங்களை செய்வதற்கும் புதிய விடயங்களை உள்ளடக்குவதற்கும் இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் புலிகளிடம் கோரிக்கை விடுக்க வேண்டும். குறிப்பாக புலிகள அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் கொலைகளை மேற்கொண்டு வருவதால் அது தொடர்பான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

04. மக்கள் நீண்டகால யுத்தத்தினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டிருப்பதால் சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கும் புலிகளுக்கும் இன்னும் நான்கு வருடங்களுக்கு யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடாது என்றொரு அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

05. இலங்கை அரசும் நோர்வேயும் யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கான அமைப்பில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களை உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேணடும்.

06. இலங்கை அரசு அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த கடந்த காலங்களில் தமிழ் மக்கள் வன்முறைகளை எதிர்நோக்கியபடியால் தற்போது மக்களின் சிவில் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

07. சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கி தெற்கின் அரசியல் கட்டமைப்புக்களும் சிவில் சமூகங்களும் கடுமையாக வேலை செய்ய வேண்டும். இடைக்கால ஏற்பாடுகள் என்று சொல்லப்படுவது புலிகள் தமிழ் மக்கள் மீது தமது அதிகாரத்தை இறுக்குவதற்கே வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுதந்திர தினம்

# ஆகஸ்ட்-15

கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்று இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உயர்ந்த விழுமியங்களை சுதந்திர கவி பாரதி உயர்த்திப் பிடித்தான்.

இந்திய உப கண்டம் முழுவதையும் இணைத்து பிரித்தானிய காலனியாதிக்கத்துக்கு எதிராக ஒன்றரை நூறாண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த சுதந்திரப் போராட்டம் உலகில் மனித குலத்தின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துக்காக போராடுபவர்கள் தமக்கு ஆதர்ஷமாக எடுத்துக் கொண்டார்கள்.

கால் நூற்றாண்டுக்கு மேலாக தென்னாபிரிக்க சிறைகளில் வாடிய நெல்சன் மண்டேலா, அமெரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய மார்டின் லூதர்கிங் போன்றவர்கள் மாபெரும் மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து காந்தியடிகள் முன்னெடுத்துச சென்ற பாதையில் உலகில் மானிட விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தார்கள்.

நாகரீகமான, சுதந்திரமான யாரும் யாருக்கும் அடிமையில்லை என்ற சீரிய சிந்தனையின் அடிப்படையில் இப்போராட்டங்கள் நிகழ்ந்தன. இந்திய சுதந்திரப் போராட்டம் சரித்திரத்தின் உன்னத நிகழ்வு. அது பரந்த பன்முகத்தன்மையை கொண்டிருந்தது. சுதந்திர இலக்கியங்கள படைக்கப்பட்டன. வங்கக்கவி தாகூரும், மைதிலி சரண் குப்தாவும், பாரதியும் ஒருவரையொருவர் சந்திக்காமலேயே ஒரே மாதிரி இந்திய சுதந்திரப் போராட்டத்துக்காக கவிதை படைத்தார்கள்.

காந்தியடிகள் ஒரு மகத்தான போராட்டப் பாதையை தெரிவு செய்திருந்தார். லட்சோப லட்சம் பாரத மக்கள் அவர் பின்னால் அணி திரண்டனர். சுபாஷ் சந்திரபோஸ், பகவத்சிங், இடதுசாரி தலைவர்களான எம்.என்.ராய், டாங்கே போன்றவர்கள் வெவ்வேறு பாதையில் சுதந்திரத்துக்கு உழைத்தாலும் காந்தியடிகள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

காங்கிரஸ் பேரியக்கம் ஜனநாயக அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றி, உலக வரலாறு பற்றி, சமூக இயக்கம் பற்றி நவ இந்தியாவின் சிற்பி ஜவர்கலால் நேரு பல்லாயிரம் பக்கங்களில் நூல்களை எழுதினார்.

பாரத சுதந்திரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதல் பல்வேறு கருத்துக்கள் ஊற்றெடுத்து செழுமையுறச் செய்தன. இந்த மாபெரும் சுதந்திர இயக்கம்தான் நாங்கள் இந்தியர்கள் என்று வெவ்வேறு மொழி பேசும் கலாசாரம் பண்பாடுகளை கொண்ட மக்களை ஒன்றிணைத்தது.

இன்றைய இந்தியாவின் வளர்ச்சியின் அடிநாதம் அல்லது அத்திவாரம் இந்திய சுதந்திர பேரியக்கமே. பல்வேறு மொழி பேசும் மக்களை ஜனநாயக வழியில் ஒருங்கே கொண்டு வந்ததில் மிகவும் சிறபபான ஜனநாயக அரசியல்யாப்பு ஒன்றை நிறுவியதில் இன்று இந்தியாவில் ஏற்பட்டு வரும் சமூக, பொருளாதார முன்னேற்றங்களில் இதன் மகத்தான பங்கு மறுக்க முடியாதது.

இலங்கையின் சுதந்திர இயக்கத்துக்கும் இந்திய சுதந்திர இயக்கமே உந்து விசையாக இருந்தது. சூரியமல இயக்கம் இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கையில் யாழ்ப்பாண வாலிபர் சங்கம், கோ. நடேச ஐயர் போன்றவர்கள் வடக்கிலும், மலையகத்திலும் இலங்கையின் சுதந்திரத்துக்காக பங்களித்தார்கள். இலங்கையின் சுதந்திரப் போராட்டக்காரர்கள் இந்தியாவிலும் தலைமறைவாக வாழந்தார்கள்.




இலங்கை- இந்திய பண்பாட்டு, கலாச்சார, மொழி, அரசியல் உறவு நீடுழி வாழ்க.

# பயங்கரவாதத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

# த. ஐ. வி. கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி அவர்கள்

## உலகத் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து.....



வன்முறைகளின் வரம்பற்ற அதிகரிப்பு. தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தற்போது பல நாடுகளில் நிகழ்கின்றன. எனவே உலகளாவியளவில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டும்.

லண்டனில் 2005 யூலை 7ம் திகதி நிகழ்ந்த குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து பிரித்தானிய பிரதமர் டொனி பிளேயர் அவர்களுக்கு இரண்டு கடிதம் எழுதினேன். சகல நாடுகளிலும் குறைந்த பட்சம் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தேன். நான் பிரித்தானிய பிரதமருக்கு எனது அவதானிப்பை பின்வருமாறு தெரிவித்திருந்தேன்.

அமெரிக்காவில் செப்டம்பர் 11 இல் இரண்டு தாக்குதல்களில் காயப்பட்டவர்கள் பிரித்தானியாவில் நிகழ்ந்த தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில் அது பன்மடங்கு பாரியதாக இருப்பினும் பீதியும், பயங்கரமும் இந்த இரண்டு சம்பவங்களிலும் ஒரே மாதிரியானவை எனத் தெரிவித்திருந்தேன்.

இலங்கையில் புலிகள் அரச தலைவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்கள், உயர் இராணுவ, கடற்படை, பொலிஸ் அதிகாரிகள் பெருமளவிலான மாற்று அரசியல் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்விமான்கள் சாதாரண மக்கள் என தற்கொலை குண்டுதாரிகள் மூலம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இதேவேளை யுத்தத்தில் சம்பந்தப்படாத 65,000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பெருந்தொகையானோர் ஆண்கள், பெண்கள் சிறுவர், சிறுமியர் ஆவார்கள்.

பல ஆயிரக்கணக்கானோர் விதவைகளாகவும், அநாதைகளாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சில ஆயிரம் பேர் தமது உறவுகளை இழந்திருக்கிறார்கள். இன்னும் சில ஆயிரம் பேர் கண்ணிவெடிகளில் காயமடைந்திருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே கைச்சாத்தானதன் பின்னர் ஒரு நாள்கூட ஒரு மாற்று அரசியல் கருத்துக் கொண்டவரோ அல்லது புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவரோ கொல்லப்படாமல் கழிந்ததில்லை. தற்செயலாக படையினர் ஒருவரின் துப்பாக்கி வெடித்த சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் கடந்த வாரம் கொல்லப்பட்டார். இதையடுத்து பொலிஸ் அத்தியட்சகர் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு விசாரணை செய்ய சென்றிருந்தார். அந்த அதிகாரி ஆயுதமோ அல்லது மெய்ப்பாதுகாவலர்களோ இல்லாமல் புலிகளின் இடத்திற்கு பேசுவதற்கென அழைத்துச் சென்றனர். அவருடைய உயிரற்ற உடல் அந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆனால் அந்தப் படுகொலையைச் செய்தவர்கள் பொது மக்கள் மீது பழிசுமத்தினர். ஆனால் எல்லோருக்கும் தெரியும் புலிகள்தான் கொன்றுவிட்டு சடலத்தை வீசியிருக்கிறார்கள் என்பது.

நான் பிறந்து வளர்ந்து 50 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுபட்டிருக்கிறேன். பாராளுமன்[illegible] வராகவும், தமிழர் [illegible] கூட்டணிக்கும் தலைவராக இருந்திருக்கிறேன். த.வி.கூ ஒரு மிதவாத அரசியல் கட்சி. அதனுடைய பல தலைவர்கள் புலிகளின் துப்பாக்கிச் சன்னங்களுக்கு இரையாகி இருக்கிறார்கள். நான் பிரதிநிதித்துவப் படுத்திய மக்களை எனக்குத் தெரியும். இந்த மாதிரியான ஒரு காட்டுமிராண்டித்தனமான படுகொலையை அவர்கள் செய்ததாக எனது அனு பவத்தில் இல்லை.

இதில் இன்னுமொரு துக்ககரமான விடயம் என்னவென்றால் இந்த அதிகாரி நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்த பொதுமகனின் படுகொலையில் சம்பந்தப்படவில்லை. இதில் கொல்லப்பட்ட பொதுமகன் மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மரணம் அனுதாபத்துடன் கரிசனையுடன் பார்க்கப்பட வேண்டியது. இந்தச் சம்பவம் திட்டமிட்டு நடந்தது என்றில்லை.

கடந்த மூன்றரை வருடங்களாக யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் காலத்தில் புலிகள் வரம்பற்ற சுதந்திரத்தை அனுபவித்தார்கள். சட்டத்தையும், ஒழுங்கையும் தம் கையில் எடுத்துக் கொண்டு தாம் விரும்பியவற்றை செய்கிறார்கள். பொதுவாக அப்பாவிகளாகவும், கடவுளுக்கு பயந்தவர்களாக இருக்கும், சாதாரண மக்களின் பின்னால் மறைந்திருந்து கொண்டு புலிகள் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த இடம் புலிகளிடமிருந்து அரசினால் விடுவிக்கப்பட்ட பிரதேசமாகும். புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழ் இந்த இடங்களில் அரசியல் வேலைகள் செய்வதற்கே அனுமதிக்கப்பட்டார்கள். பொது மக்களை துன்புறுத்துவதற்கும் கொலை செய்வதற்குமல்ல.

தற்போது புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் மக்கள் அடிமைகள் போல் வாழ வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உத்தரவுகளை மீற முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள இரும்புத்திரைக்கு அப்பால் உள்ள [illegible] நடக்கிறது என்பது அனுசரணையாளர் உட்பட வேறு யாருக்கும் தெரியாது.

2000 க்கு மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல்கள் நிகழ்ந்துள்ளன. தற்போதுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு பதிலாக புதிதாக ஒன்று உருவாக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகம் இந்த வேளையில் புலிகள் தமது சிறைகளில் வைத்திருப்பவர்களை விடுதலை செய்யவும், யுத்தத்திற்கு ஆட்களை திரட்டுவதை நிறுத்துவதற்கும், கப்பம் வசூலிப்பதை நிறுத்துவதற்கும், மாற்று அமைப்புக்களை சேர்ந்தவர்களை படுகொலை செய்வதை நிறுத்துவதற்கும், அவர்களுடைய சித்திரவதை முகாம்களை மூடுவதற்கும், அவர்களுடைய இருட்டறை தடுப்பு முகாம்களை மூடுவதற்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஜனநாயக சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

புலிகளின் உறுப்பினர்களும் அவர்களின் முன்னணி அமைப்புக்களும் சட்டவிரோதமாக நிதி திரட்டுவது, அச்சுறுத்துவது, கோயில் நிர்வாகங்களில் தலையிடுவது, தமிழ் பாடசாலைகளில் தலையிடுவது எல்லாம் தமிழர்கள் மீது பாரதூரமான ஜனநாயக மீறல்களாக அவர்களுக்கு புகலிடம் வழங்கிய நாடுகளில் காணப்படுகின்றன.

சர்வதேச சமூகம் புலிகள் ஆயுதங்களை கைவிடுவதற்கும், சமஷ்டி அரசியல் தீர்வை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும். புலிகளின் தற்கொலை குண்டுத்தாக்குதல் தந்திரங்களை உலகத்தின் ஏனைய பயங்கரவாத இயக்கங்கள் மேற்கொள்வது ஒன்றும் ரகசியமான விடயமல்ல. கூட்டாக அழுத்தத்தை பிரயோகிப்பதே பயங்கரவாத குழுக்களை கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழியாகும்.

நான் உங்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வது உலகில் இருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கும், ஒரு நியாயமான தீர்வை எட்டுவதற்குமான வழிவகைகளையே.

12-08-2005 இல் நிகழ்ந்த வெளிவிவகார அமைச்சரின் படுகொலை எனது நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராஜகவாதிகள் கதிர்காமரின் மரணத்தை கொண்டாடுகிறார்கள்

கதிர்காமரைப் படுகொலைசெய்தது ஒரு கோழைத்தனமான ஈனச் செயல் என்பது யாருக்கும் புரியக் கூடியதே. ஆனால் இந்த நயவஞ்சக பயங்கரவாதத்தை வன்னியிலும், மெல்போர்னிலும் காட்டு மிராண்டித் தமிழர்கள் கொண்டாடினார்களாம்.

இந்த காட்டுமிராண்டித் தமிழர்கள் நீலனின் மரணத்தை, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தை கொண்டாடியவர்கள். ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் பாலசிங்கம் இந்தியா முடிந்தது என்று உளறினாராம்.

இந்தப் பேர்வழி லண்டனில் பகிரங்கமாக சுதந்திரமாக வாழ முடிகிறது. லண்டன் ரயில் நிலையங்களிலும், பஸ் நிலையங்களிலும் குண்டுகள் வெடிக்கும் போது இந்த பயங்கரவாத சிந்தாந்தி சுதந்திரமாக வாழவும், பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கும் பாணியில் அறிக்கை விடவும் முடிகிறது. பாலசிங்கத்தின் அறிகைகள் மிரட்டல் தொனியிலும், வன்முறை தொனியிலும் அமைந்திருந்தன. சிலவேளை கதிர்காமருக்கு என்ன நிகழப் போகிறது என்பது பாலசிங்கத்துகத முன்கூட்டியே தெரிந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உலகறிந்த புலமையாளர் பல்லினங்களின் ஒன்றியமாக இலங்கையை கனவுகண்ட நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டபோது அவர் ஒரு தமிழ்த்துரோகி என்று வியாக்கியானம் செய்த தமிழ் உணர்வு படைத்தோரை என்னவென்றழைப்பது.

1987 மார்ச்சில் 57 மாற்று இயக்கங்களின் அங்கத்தவர்கள் அருணா என்ற புலி கொலைஞனால் ஒருசில நிமிடங்களில் சுட்டுக் கொல்லப்பட்டதை, அந்த சிறிய அறை ரணகளமாகியதை, சமூகத்துக்கு போராட வந்தவர்கள் குரூரமாக மௌனிக்க வைத்ததை கா.சிவத்தம்பி லண்டனில் நிகழ்ந்த கருத்தரங்கொன்றில் நியாயப்படுத்தியது பலருக்கு தெரியாத சங்கதி. அக்கருத்தரங்கில் அவர்கள் யார்? எங்கிருந்து வந்தவர்கள் என்று இந்த கல்விமான் கேள்வி எழுப்பியிருந்தாராம். இந்த விடயம் இது 1990 களின் முற்பகுதியில் வெளிவந்த புதிய கண்ணோட்டம் பத்திரிகையில் இடம்பெற்றிருந்தது.

1986 மார்ச் ஏப்பிரலில் ரெலோ இயக்கம் தடைசெய்யப்பட்டு ரெலோ இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டு வீதி வீதியாக எரிக்கப்பட்ட போது இதனை கொக்காகோலா கொடுத்து கொணடாடிய பிரகிருதிகளை என்னவென்று அழைப்பது?.



கல்வி மனித வாழ்விற்கும் மனித மேம்பாட்டுக்கும் ஆதாரமானது, ஆணிவேரானது என்பது தேசியத்தலைவர் (பிரபாகரன்) சிந்தனையென்று அண்மையில் முல்லைத்தீவு பாடசாலையில் நிகழ்ந்த வைபவமொன்றில் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருந்தாராம். தமிழ்ச்செல்வனின் இந்த நகைச்சுவை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற முழு தகுதியும் கொண்டது.

கற்றாரை கற்றார் காமுறுவர் என்பது வள்ளுவர் வாக்கு ஆனால் கற்றாரை கண்டால் கண்ட இடத்திலேயே நயவஞ்சகமாக கொல்வது தேசியத்தலைவரின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபா ஆனந்தராஜா, 1980 களின் நடுப்பகுதியில் நயவஞ்சகமாக புலிகளால் கொல்லப்பட்டார். முறிந்த பனை என்ற நூலின் ஊடாக ரஜனி திரணகம அவர்கள் தமிழ் தேசியத்தின் தார்மீக தகுதிகள் பற்றிய கேள்விகளை எழுப்பிய போது அவர் மருத்துவ கல்லூரி வாசலில் வைத்து நயவஞ்சகமாக கொல்லப்பட்டார்.

தமிழ் சமூகத்தில் தலைசிறந்த புலமையாளராக திகழ்ந்த மனிதஉரிமை வாதியும், அரசியல்யாப்பு நிபுணருமான நீலன் திருச்செல்வம் அவர்களை புலிகள் தற்கொலை குண்டுதாரி மூலம் சிதைத்து அழித்தார்கள்.

தற்போது கதிர்காமர் சினைப்பர் கொலையாளியால் நயவஞ்சகமாக கொல்லப்பட்டார். வாலியை மறைந்திருந்து கொன்றதற்காக இராமன் மனம் வருந்தினானாம் என்பதே இதிகாசம். ஆனால் இங்கு ஈழத்தமிழர் சமூகத்தில் சதிகள் மாத்திரமே கோலோச்சுகின்றன. பிரபாகரனின் கல்விச் சிந்தனையைப் பற்றி தமிழ்ச்செல்வன் ஒரு வசனத்தில நறுக்குத் தெறிக்கத் தெரிவித்திருந்தார்.

கல்வியாளர்களை பிரபாகரன் எந்தளவுக்கு வெறுக்கிறார், எமது சமூகத்தில் கல்வியை எந்தளவுக்கு வெறுக்கிறார் என்பதற்கு அவருடைய புலமையாளர்கள் மீதான படுகொலை பட்டியலும் யுத்தத்திற்கு அணிதிரட்டப்படும், மனித வெடிகுண்டு களாக மாற்றப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையே சான்று. ஆனால் தனது பிள்ளைகளுக்கு மாத்திரம் சிறந்த கல்வி வேண்டும் என்று அவர் கரிசனை கொண்டுள்ளார். ஊர், உலகத்து பிள்ளைகளுக்கு அல்ல.

கல்வியாளர்களை நயவஞ்சகமாக படுகொலை செய்வது அவர்களின் புலமைத்துவம் சுடர்விடும் அறிவு தொடர்பாக எழுந்த அச்சமே. இவர்களை பாரதியின் வார்த்தையில் குறிப்பிடுவதானால் வீரமிலா நாய்கள் என்றே குறிப்பிட முடியும்.

நன்றி:- தமிழ்நியூஸ்வெப்
15-08-2005

# இனவாத அரசியல்
## போக்கிரிகளும் அயோக்கியர்களும்

கடந்த இரண்டு தசாப்தமாக புலிகள் சகதமிழர்களை தேசத்துரோகிகள், இந்திய கைககூலிகள், ஏஜண்டுகள் என அழைப்பது போல மிக நீணடகாலமாகவே பல தசாப்தங்களாகவே இலங்கையில் தமிழர்களை கள்ளத்தோணியென்று சிங்கள அரசியல் வாதிகள் ஆவேசமாக கூச்சலிடுவது வாயிலிருந்து நஞ்சைக்கக்குவது இத்தகைய அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் சமூகங்கள் மீது வன்முறையை மேற்கொள்வது ஒன்றும் இலங்கையில் புதிய விடயமல்ல.

தற்போது தெற்கின் உதிரி அரசியல் வாதியான மேர்வின் சில்வா தனது வாயிலிருந்து இலங்கையின் மலையக மக்களுக்கெதிராக தூசணை வார்த்தைகளை ஆணவத்துடனும், மமதையுடனும் உதிர்த்தார். துட்டகை முனுவின் வாரிசு என சினிமா வில்லன் பாணி வசனம் பேசினார். சமூகங்களுக்கெதிராக இப்படி வார்த்தைகளை உதிர்ப்பது விளையாட்டல்ல. அது பாரிய விபரீதங்களை உருவாக்கலாம்.

ஓர்மமான புலி உறுப்பினர்கள் எப்போதும் தூய தூசணையிலேயே பேசுவார்கள். யாழ் அரச அதிபர் கணேஷ் எதை நினைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் அரச அலுவல்கள் யாவும் தமிழில் நிகழவேண்டும் என்று தெரிவித்தாரோ தெரியாது. வடக்கு கிழக்கில் தமிழ் அரியாசனம் ஏறும் வாய்ப்பைக் கொண்ட மொழி தமிழ் அல்ல. அது சிங்களமும் ஆங்கிலமும் கூட அல்ல தூசணமே அது. வன்முறையின், பாசிசத்தின் மொழி. பாசிசம் தமிழை தூசணமாக மாற்றியிருக்கிறது. சரமாரியாக கொல்லப்பட்டவர்கள் மீதும் வகைதொகையின்றி பிடித்துச் செல்லப்பட்ட பிள்ளைகள் மீதும் என்ன வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன என்பது யாருக்கும் தெரியாததல்ல.

வடக்கு கிழக்கில் தமிழ் அரசகரும மொழியாகுமோ இல்லையோ தூஷணம் அந்த இடத்தைப்பிடித்து விடும். எனவே மேர்வின் சில்வாவின் மொழி அவரை விட பல மடங்கு மேலாக புலித்தமிழருக்கு கை வந்த கலை.

இலங்கையின் அரசியல் சமூக அரங்கில் காணப்படும் வெறுப்பும், குரோதமும் காழ்ப்புணர்வும் போலிப் பெருமித எண்ணங்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் தூசணங்களாகவே இருந்தன.

கே.எம்.பி. ராஜரட்ண, ஜேஆர், சிறில் மத்தியூ போன்றவர்கள் இந்த நாட்டில் தமிழ் முஸ்லீம் மலையக மக்களை அவதூறு செய்யும் விதமான வார்த்தை பிரயோகங்களை அவ்வப் போது வாந்தியெடுத்தார்கள்.

"வயித்துக்குத்த நம்பினாலும் வடக்கத்தையான நம்பக் கூடாது"

"மஞ்சள் துண்டுக்கு கழுத்தறுத்த சிங்களவன்"

"படுத்த பாயோடு ஒட்டவைத்து வசியம் பண்ணற மட்டக்களப்பான்"

என்று யாழ்ப்பெருங் குடித்தோன்றல்கள் ஜனரஞ்சகமாக வைத்திருக்கும் விஷம வார்த்தைகள் எவருக்கும் தெரியாதென்றல்ல.

சிங்கள நிலப்பிரபுத்துவ வழி உயர் குழாம், தமிழரை கள்ளத்தோணி என்று சொல்வதும், தமிழர் விரோத சிங்கள மன்னர்களின் வாரிசுகள் எனச சொல்லி கற்பித ஆரிய போதையில் கிறங்கினார்கள். இந்த போதையூட்டும் பிரகிருதிகள் மக்களை முட்டாள்கள் ஆக்கினார்கள்.

இந்தியா என்பது இலங்கையின் சகல சமூகங்களினதும் வேர். எமது ஆன்ம கலாச்சாரத்தின் தொட்டில். இந்தியக் கருவறையில் தான் இலங்கை சமூகமே உருவாகியது என்ற உண்மையை இந்த மூடர்கள் மறுதலித்து மக்களின் பாமரத்தனத்தில் குளிர்காய விளைகிறார்கள்.

எமது மதம், மொழி, பண்பாடு, பொருளாதார வாழ்வு நாம் வாழும் புவிப்பரப்பு முழுவதும் இந்திய உபகண்டத்தின் சாயல் கொண்டதென்பதை அதையாரும் பிரிக்கமுடியாதென்பதை யாருக்கும் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் 170 வருடங்களாக இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்களை ஈட்டுக்கும், பாட்டுக்கும் விம்பிற்கு இழுப்பது சிங்கள இனவாதிகளின் வாடிக்கை. மலையக மக்களின் வாழ்வில் எந்த குறிப்பிடத்தகுந்த மறுசீரமைப்பும் நிகழவில்லை. இவர்கள் இன்றும் பன்றிக் கொட்டகைகளை ஒத்த லயன் அறைகளில்தான் வாழ்கிறார்கள். இந்த அவலம் இந்த நாட்டின் முற்போக்கு இயக்கத்தை, இடதுசாரி இயக்கத்தை சேர்ந்தவர்களுக்கும் நெருடலான விடயமாகும்.

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் மலையாளிகளுக் கெதிரான வன்முறைகள் முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பின்னர் தோட்டத் தொழிலாளர்களுக்கெதிரான வெறுப்பு ஏ.ஈ. குணசிங்க போன்ற பாசிச விருப்பார்வ பிற்போக்கு தொழிற்சங்க வாதிகளால் முன்வைக்கப்பட்டது.

ஐ.தே.க வின் பிதாமகன் டி.எஸ்., ஜி.ஜி. பொன்னம்பலம் போன்ற வெள்ளிநாக்கு யாழ்ப்பாண உயர்குடித் தோன்றல்களும் இணைந்து மலையக மக்களின் வாக்குரிமை, பிரஜா உரிமையைப் பறித்தார்கள். இலங்கையில் சிங்கள உயர் குளாத்தினரின் ஒரு பகுதியினர் தமிழர்களுக்கெதிராக ஒரு இழிந்த மன நிலையைக் கொணடிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அது நீதித்துறை வரை விரவிக் காணப்படுகிறது. சத்துருக் கொண்டான் படுகொலை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்கள், பிந்தனுவெவ புனர்வாழ்வுமையப் படுகொலை தொடர்பான தீர்ப்புக்கள் எல்லாம் இலங்கையின் அரசுயந்திரத்தின் கட்டமைப்பில் செய்யப்படவேண்டிய மறுசீரமைப்புத் தேவைகளை வலியுறுத்தி நின்றன.

சில வளர்ச்சியடைந்த நாடுகளில் இனவாதம் பேசுவது தண்டணைக்குரிய குற்றம். இலங்கை போன்ற நாடுகளில யாரும் வாயோரியாக என்ன வேண்டுமானாலும் கூறிப்போகலாம். அந்த வகையில் இந்த உதிரி அரசியல்வாதியின் அராஜகம் ஒடுக்கப்படவேண்டும் இத்தகைய போககுகள் சகல மட்டங்களிலும் சகல தரப்பிலும் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும்.

நன்றி:- தமிழ்நியூஸ்வெப்
10-08-2005

# இலங்கை எதிர்நோக்கி.................

01ம் பக்கத் தொடர்ச்சி

உதிரி அரசியல்வாதிகளாகவும் அமைகின்றனர். சில நாடுகளின் ஆக்கிரமிப்பு தேவைகளுக்காகவும் பயங்கரவாதிகள் கையாளப்படுகிறார்கள்.

பயங்கரவாதத்துக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் இடையே தெளிவானதொரு எல்லைக்கோடு வேண்டும். உலகளாவியளவில் இதற்கான கருத்தாடல்கள் நடைபெற வேண்டும்.

சுதந்திர இயக்கத்திற்கு உலகில் பல உதாரணங்கள் இருக்கின்றன. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம், தென்னாபிரிக்க சுதந்திர இயக்கம், பர்மிய ஜனநாயக இயக்கம், கியூபா, வியட்நாமின் சுதந்திர இயக்கம், பாலஸ்தீன சுதந்திர இயக்கம் என பலவற்றை நாம் வரலாற்றிலிருந்து கூறலாம்.

இதேவேளை கடற்கொள்ளையர்கள், பாசிஸ்டுக்கள், மாபியாக்கள், தலிபான்கள் போன்ற மத, இன அடிப்படைவாதிகளை நாங்கள் அறிந்திருக்கிறோம். புலிகள் இந்த இரண்டாம் தரகங்களின் பல்வேறு குணாம்ச கூறுகளை கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் தம்மளவில் மாத்திரம் நின்றுவிடவில்லை. சமூகத்திலும் படுகொலைகளை கொண்டாடும் ஒரு கும்பலை உருவாக்கி விட்டிருக்கிறார்கள். இது மிகவும் மிக மோசமான நிலைமையாகும்.

1986 வரை தமிழ் மக்கள் மத்தியிலும் ஏதோவொரு அளவில் பல தவறுகள் குறைபாடுகளுடன் ஒரு சுதந்திர போராட்ட இயக்கம் தக்க வைக்கப்பட்டிருந்தது. புலிகள் அதனை சிதைத்தழித்து தமது பாசிச அராஜகத்தை நிலைநிறுத்தினார்கள்.

எனவே இலங்கையில் இனங்களின சம உரிமைக்கான கோரிக்கைகளுடன் புலிகளின் அராஜகத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திர இயக்கம் மேலெழுந்தது.

மாற்றுக் கட்சிகள், மாற்றுக் கருத்துக் கொண்ட புத்திஜீவிகள் தனிநபர்கள் ஒருங்கேயும், தனித்தும் குரல் கொடுத்தார்கள். புலிகளின் பாசிசத்துக்கு எதிராக வெவ்வேறு தளங்களில் குரல்கள் எழுந்தன.

இதை ஊன்றி கவனிக்க வேண்டும். மாற்று இயக்கங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை தொடர்ந்தது. அமிர்தலிங்கம், பத்மநாபா, சிறீசபாரத்தினம், வாசுதேவா ஆயிரக்கணக்கான சுதந்திரப் போராட்டக்காரர்களுடன் அது நின்றுவிடவில்லை. சரோஜினி யோகேஸ்வரன், சுபத்திரன், சாம் தம்பிமுத்து என அது தொடர்ந்தது.

புத்திஜீவிகளின் தளத்தில் ரஜனி திரணகம போன்ற மனித உரிமைவாதிகள் தமிழ் தேசியத்தின் வங்குரோத்துத் தொடர்பான கேள்விகளை எழுப்பியபோது அவர் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டார்.

சிறுவர்களை புலிகள் அணிதிரட்டுவது தொடர்பாக ஐ.நா வின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுண்ணு பல தடவை கேள்வி எழுப்பியிருந்தார். எனினும அவர் அதிஷ்டவசமாக உயிர்வாழ்கிறார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு முன்முயற்சிகளை மேற்கொண்ட காரணத்துக்காக புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

கதிர்காமர் இலங்கையில் நாகரிகமான வாழ்வொன்றை உருவாக்குவதற்காக, பாடுபட்டதற்காக படுகொலை செய்யப்பட்டார்.

நீலன் திருசசெல்வம் இலங்கையில அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் இலங்கை சமூகங்களின் ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்கு பாடுபட்டதற்காக படுகொலை செய்யப்பட்டார்.

எனவே புலிகளின் பாசிச வன்முறைகளுக்கு எதிராக உலகளாவிய அளவில் பரந்ததொரு அபிப்பிராயம் உண்டு. அது உலகின் முன்னேற்றம், நாகரீகம், சமூக மேம்பாடு, சுபிட்சம் என்பவற்றை கருத்தில் கொண்ட பிரிவினர்.

எனவே உலகம் முன்னோக்கிய பாதையில் செல்ல வேண்டும் என்று கருதுபவர்கள் இலங்கை உலகத்துடன் இணைந்து முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமென கருதுபவர்கள் புலிகளுடன் சமரசம் செய்துகொள்ள முடியாது.

புலிகள் துணைப்படை, கைக்கூலி, தேசத்துரோகி என்று யாரையாவது அழைத்தால் இந்த பெயர்கள் சூட்டிக் கொல்லப்பட்டால் அவ்வாறு தூற்றப்படுபவர்கள், கொல்லப்படுபவர்கள் மகத்தான மனிதர்களாகவே இருப்பார்கள். புலிகளிடம் நற்பெயர் பெற்றிருப்பவர்கள் அநேகமாக காட்டுமிராண்டிகளாகத்தான் இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனாதிபதி தேர்தலும் சர்வதேச பந்தயக்காரர்களும்

இலங்கையில் 2005 ஆண்டு இறுதியிலா அல்லது 2006 ஆண்டிலா என்ற மயிர்பிளக்கும் வாதங்கள் இலங்கையில் சூடு பிடித்திருக்கின்றன.

வருடாந்தம் ஒரு தேர்தல் என்பது ஆயிரம் மில்லியன் மக்களின் பணத்தை விழுங்கிவிடும் ஒரு சூதாட்டமா என ஐயுறும் அளவிற்கு இலங்கையின் அரசியல் அதிகார கட்டமைப்பு ஈடாட்டம் கண்டுள்ளது. அரசு அற்ற நிலையை நோக்கி "மார்க்ஸ் கூறிய நிலையல்ல". இலங்கை சென்றுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒரு அராஜக நிலை தலைதூக்கியுள்ளது.

இலங்கையில் யார் பதவியில் இருக்க வேண்டும், இருக்கக்கூடாது என்பதில் வட அமெரிக்க, ஐரோப்பிய பழைமைவாத சக்திகளுக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அவை அநாவசியமாக இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைக்கின்றன. இலங்கையில் யார் நாட்டின் தலைவராக இருக்க வேண்டும் என்று சூசகமாக, சிலவேளை வெளிப்படையாகவே கூறமுயல்கின்றன. இது இலங்கையில் மிச்ச சொச்சமாக இருக்கும் ஜனநாயக கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலாகும்.

புலிகளின் படுகொலைகளையும், வடக்கு கிழக்கில் ஜனநாயகம் அறவே இல்லாத நிலைமையையும் கண்டுகொள்ளாத இந்த சக்திகள் இலங்கையில் சமூக பொருளாதார அக்கறையுள்ள சக்திகளை விட சமூக சூறையாடலில் ஈடுபடும் சக்திகள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்று அங்கலாய்த்து நிற்கின்றனர்.

புலிகளை திருப்திப்படுத்தாத (தமிழ மக்களையல்ல) எவரும் ஆட்சியதிகாரத்தில் அமர முடியாது. அதிகாரத்துக்கு வரமுடியாது என பயமுறுத்தவும் போதனை செய்யவும் சில பெரு வர்த்தக நலன்சார் ஊடகங்களும் வேறு பல சக்திகளும் கூறி வருகின்றன. இலங்கையில் சுதந்திரமான கருத்து வெளிப்பாடு என்பதைவிட பணம் சார்ந்த கருத்து வெளிப்பாடு முதன்மை பெற்றிருக்கிறது, தார்மீக வலு குன்றியிருக்கிறது.

அண்மைக்காலமாக தென்அமெரிக்கா, சில ஆசிய நாடுகள், சில ஐரோப்பிய நாடுகளிலும் கூட சமூக சாதகமான சக்திகள் மீண்டும் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. உலகமயமாக்கல நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. உலகமயமாக்கல் அதன் போதாமை, அதன் நோக்கம், அதன் கையாலாகாத்தனம், அதன் பெருவாரியான மக்களின் நலன்களுக்கு அபிலாஷைகளுக்கு எதிரான நிலை ஒவ்வொரு நாட்டிலும் உள்ளூர் பெருவாரியான மக்கள் நலன் சார்ந்த அரசியல் கட்சிகள், நிறுவனங்கள் மீது மக்களுக்கு ஈட்பை ஏற்படுத்தி வருகிறது.

ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் மக்கள் பயங்கரவாதத்துக்கு எதிராகவும், ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவும், விழித்துக்கொண்டுள்ளனர். இலங்கை, இந்தியா, தென் அமெரிக்க நாடுகளில் கிராமங்களில் நிலவும வறுமையை போக்குவதற்கு சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கு யார் உதவுவார்களோ அவர்கள் பற்றிய தேடல் அதிகரித்திருக்கிறது. அண்மைய அரசியல் மாற்றங்களில் அதனை நாம் காணலாம்.

இலங்கையில் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க ஆகியவற்றின் ஜனாதிபதி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யார் பெருவாரியான மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கெடுப்பார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருக்கிறது. இலங்கையில் ஜே.வி.பி ஒரு குறிப்பிடத்தகுந்த அரசியல் சக்தியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இனப்பிரச்சினை தொடர்பாக அவர்களுக்கு எத்தகைய நிலைப்பாடு இருப்பினும், ஒப்பீட்டளவில் கூடுதலான சமூக ஈடுபாட்டை கொண்டவர்கள்.

வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லீம், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை பொறுத்தவரை அவற்றில் பல்வேறு விதமான குணாம்ச ரீதியான வேறுபாடுகள் உண்டு.

வடக்கு கிழக்கு தமிழ் அரசியலில் த.தே.கூ என்பது புலிகளின் முகவர் அமைப்பு என்பதை சொல்லி விளங்க வேண்டிய தேவையில்லை. எந்த சொந்தக் கருத்தோ மக்கள் பற்றிய கரிசனையோ அற்ற வெறும் பதவி பேராசைக்கொண்ட சிறுமதியாளர்களின் கதம்பக் கூட்டமே அது. தமிழ் மக்களின் உரிமைகளிலோ, தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம் நிலவ வேண்டும் என்பதிலோ, இலங்கையின் தேசிய சமூக பொருளாதார வளர்ச்சியிலோ இதற்கு சிறிதும் அக்கறை கிடையாது. புலிகளை ஏகபிரதிநிதிகளாக வரித்துக்கொண்ட இவர்கள் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. புலிகள் சொல்வதை இவர்கள் சொல்வார்கள்.

புலிகளை பொறுத்தவரை தென்னிலங்கையில் ஒரு ஸ்தீரமற்ற நிலைமையும், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வோ, அல்லது வடக்கு கிழக்கில் ஜனநாயகமோ உருவாகாமல் தடுப்பதில் எவ்வளவு அராஜகத்தைப் புரிய முடியுமோ அவ்வளவு எல்லைகடந்த, வரம்பற்ற அராஜக சுதந்திரத்தை வேண்டி நிற்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் மக்களை சூறையாடுவதற்கும், தமது யுத்த இயந்திரத்தைப் பலப்படுத்துவதற்கும் வரம்பற்ற கொலை சந்தையை வியாபிப்பதற்கும் தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தால் அது சுலபமாக இருக்கும் என்ற தெரிவு உண்டு.

தமது இந்த அராஜக ராச்சியத்திற்காக மலையகத்தைச் சேர்ந்த, கொழும்பைச் சேர்ந்த சில தமிழ் அரசியல் கட்சிகளையும் வளைத்துப் போட்டிருக்கிறார்கள்.

மலையக மக்களின் அபிலாஷையாக இருக்கக்கூடிய விடயங்கள், தீர்வுக்காணப்பட வேண்டிய விடயங்கள் கண்ணுக்கு முன்னால் தெட்டத்தெளிவாக இருக்கின்றன. 170 வருடங்களுக்கு மேலான லயன் வாழ்வு முடிவு கட்டப்பட வேண்டும். கல்வி, சுகாதார, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் வழங்கல் வசதிகள், உருவாக்கப்பட வேண்டும். அது இலங்கையின் அடிப்படை சராசரி தராதரத்தின் கீழ்நிலையில் தான் உள்ளது. மலையக அரசியல் தலைமைகள் இதனையே முதன்மைப்படுத்த வேண்டும்.

பல்வேறு சமூகங்களுடன் குறிப்பாக பெரும்பான்மை சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டிய யதார்த்த சூழ்நிலை மலையக மக்களுக்கு உள்ளது.

வடக்கு கிழக்கின் அரசியல் தலைமைகளையும் வடக்கு கிழக்கில் வாழ்ந்த முஸ்லீம், சிங்கள சமூகங்கள் மீது அபகீர்த்திமிக்க தாக்குதல்களை அச்சுறுத்தல்களை மேற்கொண்டுவரும் புலிகளுடன் சகவாசம் வைத்திருப்பது மலையக மக்களின் நலன்களுக்கு பாதகமாகவே அமையும்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மலையக மக்களின் அடிப்படை நலன்களை முன்நிறுத்தியே மலையக கட்சிகள் செயற்பட வேண்டும்.

முஸ்லீம்களை பொறுத்தவரை கிழக்கிலும் மன்னாரிலும் இந்த சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் எழுந்த அச்சுறுத்தல்கள் அனுபவவாயிலாகவே தெரியும். கிழக்கில் ரணில்-பிரபா ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின் பொத்துவிலில் இருந்து மூதூர் கிண்ணியா வரை முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன. இது முஸ்லீம் அரசியல் கட்சிகள் பல்வேறு கூறுகளாக பிரிந்து நின்ற போது அனைவருக்கும தெரிந்த உண்மை. முஸ்லீம்களின் காணிகள், புலிகளால் அபகரிக்கப்பட்ட விவசாய நிலங்கள் புலிகளால் திருப்பி வழங்கப்படவேயில்லை. 15வருடங்களுக்கு முன்னர் யாழில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் சமாதானத்தின் பேரிலும் திருப்பி அழைக்கப்படவில்லை.

சுனாமி அனர்த்தம் வடக்கு கிழக்கில் முஸ்லீம்களையே 60 வீதத்திற்கு பாதித்திருந்தது. எனினும் புலிகளின் அராஜக ஆக்கிரமிப்பு மேலாதிக்க நிலைப்பாட்டினால் தமக்குரிய நியாயமான நிவாரணத்தை பெற முடியவில்லை.

வடக்கு கிழக்கின் மாற்று தமிழ் கட்சிகள் முன்னர் இருந்ததைவிட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன படுகொலைகள் மூலம் மாற்றுக கட்சியினர் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகிறார்கள். அது மாத்திரமல்ல. கடந்த வருடம் ஏப்ரலில் நடைபெற்ற தேர்தல் எவ்வளவு தூரம் சுத்துமாத்தானது என்பதை சர்வதேச மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களும், காமன் வெல்த் போன்ற அமைப்புக்களும் குறிப்பிடத் தவறவில்லை.

ஆனால் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு ஜனநாயக சூழல் இந்த நாட்டின் வடக்கு கிழக்கில் நிலவுகிறதா என்பதைப்பற்றி யாரும் கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை. இது முதன்மையானதும் முக்கியமானதுமான விடயம்.

நாம் ஆசியாவின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் அருகில் இருக்கிறோம். "தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி ஜனநாயகத்தைப்பற்றி பாடியிருந்தான். சமூக சமத்துவத்தைப்பற்றி பாடியிருந்தான் ஆனால இங்கு ஒரு பகுதி மக்கள் வாக்களிக்கும் உரிமை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தைப்பற்றி யாரும் அலட்டிக்கொள்ளாதது இந்த நாட்டை மிகப்பெரிய பிணி தொற்றியிருப்பதையே புலப்படுத்துகிறது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

### கட்சியின் நிலைப்பாடுகள் III

1. இலங்கையின் இன முரண்பாடு தீர்க்க முடியாத ஒன்று போல காட்சி தரும் வகையில் சிக்கலடைந்திருக்கின்றது. அதற்குக் காரணமாக உள்ள சக்திகள் இரண்டு. அதில் ஒன்று வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செயற்படும் பௌத்தசிங்கள பேரினவாதிகள். இவர்கள் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வரும் சிங்கள பேரினவாதம் சாதித்துள்ளவைகளை மேலும் ஆழமாகவும் விரிவாகவும் பதித்து சிறுபான்மை தேசிய இனங்களை நசுக்கிய ஒரு சிங்கள பௌத்த இறுதி வெற்றிக்கான கனவுடன் செயற்பட்டு வருகின்றன.

இந்த சக்திகள் நியாயமான அரசியற் தீர்வைக் காலம் தள்ளிப் போடுவதன் மூலமும், மக்கள் மத்தியில் யுத்த நிலைமையை அல்லது யுத்த இறுக்க (war tension) நிலைமையை பராமரிப்பதன் மூலமும், நியாயமான அரசியற் தீர்வுக்கான கோரிக்கைகளை பிரிவினைக்கான கோரிக்கைகள் போலக்காட்டி சாதாரண சிங்கள மக்களை அச்சத்தில் வைத்திருப்பதன் மூலமும் காலப் போக்கில் தமது பேரினவாத உள்நோக்கங்களை அடைந்துவிட முயற்சிக்கின்றனர். மறுபுறம் இவ்விடயத்தில் தடையாக இருக்கும் சக்தியாக புலிகள் உள்ளனர்.

பேச்சுவார்த்தைகளை அவ்வப்போது தனக்கு ஏற்படும் நெருக்கடிகளிலிருந்து தன்னை விடுவிப்பதற்காக புலிகள் பேச்சுவார்த்தை என்ற நாடக மேடையில் பங்கு பற்றி வந்தாலும் அது தனது பிரிவினை என்ற உள்நோக்கிலிருந்து சிறிதும் மாறவில்லை. அதனை மாறவும் முடியாது. பிரிவினையற்ற அரசியற் தீர்வும் ஜனநாயகச் சூழலும் புலிகளின் இருப்புக்கு எதிரான தாயாகும், சிங்களப் பேரினவாதிகளைப் போலவே புலிகளும் இந்த முரண்பாட்டை நீண்டகாலத்துக்கு இழுத்துச்செல்வதன் மூலமும், யுத்த நிலைமையை அல்லது யுத்த இறுக்க நிலைமய்யை மக்கள் மத்தியில் தொடர்ந்து பராமரிப்பதன் மூலமும், நியாயமான அரசியற் தீர்வுக்காகவும் தமிழர்கள் மத்தியில் இழக்கப்பட்டிருக்கும் ஜனநாயகத்தை மீள நிலைநிறுத்துவதற்காகவும் உழைக்கும் அரசியற் சக்திகளை படுகொலை செய்து சித்திரவதைகள் செய்து மிரட்டி வலுவிழக்கச்செய்வதன் மூலமும் புலிகள் தமது பிரிவினை நோக்கத்தை அடையவும் அதனூடாக புலிகளின் இராணுவ எதேச்சாதிகாரம் ஒன்றை நிறுவி விடலாம் என்ற கனவுடன் செயற்படுகின்றனர். உண்மையில் சிங்கள பேரினவாதிகளும் புலிகளும் மறைமுகமாக ஆளையாள் அங்கீகரிப்பவர்களாகவும், ஆளுக்காள் ஒத்துழைப்பு வழங்குபவர்களாகவும் உள்ளதை நாம் காணமுடிகின்றது.

2. இதேவேளை ஐக்கிய இலங்கை என்ற அரசியற் கட்டமைப்புக்குள் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கான நியாயமான அரசியற் தீர்வு ஏற்படுத்தப்படவில்லை என்பதற்காகவும், இவ்விடயத்தில் இலங்கையின் பிரதான சிங்களக் கட்சிகள் அரசாங்கத்தில் இருக்கும் போது ஒரு போக்கையும், எதிர்க்கட்சியில் இருக்கும் போது வேறொரு போக்கையும் தொடர்ந்து கடைப்பிடித்து ஒரு அரசியற் தீர்வுக்கு வழிவகுக்காமல் மாறாக இனங்களுக்கிடையிலான முரண்பாடு மேலும் மேலும் கூர்மையடைவதற்கே வழிவகுக்கிறார்கள் என்பதனாலும், இதனால் ஐக்கிய இலங்கைக்குள் ஓர் நியாயமான அரசியல் தீர்வு ஏற்படுமா என்ற சந்தேகமே நாளுக்கு நாள் வலுப்படுவதனாலும் நாமும் மறைமுகமாக, சிங்கள ஆட்சியாளர்களையும் சிங்கள இனவாதிகளையும் மிரட்டும் நோக்குடன் பிரிவினைக்கான கோரிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ நியாயப்படுத்தி வந்திருக்கிறோம். இந்த அரசியல் அணுகுமுறையானது பல வகையிலும் பேரினவாதிகளுக்கும் புலிகளின் பாசிச பயங்கரவாதத்துக்கும் வசதியாகவே அமைந்து விடுகின்றது. அத்துடன் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள சக்திகளிடையே ஒரு ஐக்கியப்பட்ட இயக்கம் ஏற்படுவதற்கு தடையாகவும் இருந்து வந்திருக்கின்றது.

## யுத்தப்பிராந்தியத்திலிருந்து குரல்கள்"

### நிருபமா சுப்பிரமணியம்

"பிரபல இந்திய ஊடகவியலாளர் நிருபமா சுப்ரமணியம் அவர்கள்" யுத்தப் பிராந்தியத்தில் இருந்து குரல்கள், என்றவொரு 230 பக்கங்களை கொண்ட நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.


இது சாதாரண மக்களான விவசாயிகள், மீனவர்கள், வர்த்தகர்கள், ஓய்வூதியகாரர்கள், வீட்டில் இருக்கும் பெண்கள், பாடசாலை சிறார்கள் இவர்களின் வாழ்வில் யுத்த இயந்திரத்தின் தலையீடு பற்றியது. அவர்களுடைய கதைகள் உண்டு. அது அவர்கள் அனுபவித்த துன்பங்கள் பற்றியது. அதே நேரத்தில் அவர்கள் மிகுந்த வலுவுடனும் ஆற்றலுடனும் அதனை எதிர் கொண்டார்கள்.

நிருபமா சுப்ரமணியம் என்ற ஊடகவியலாளர் ஏழு வருடங்கள் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் நெருக்கடிக்குள்ளான நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றில் நேர்ந்தவற்றை சித்தரித்துள்ளார். சிறுவர்கள் பலாத்காரமாக படையணிகளுக்கு அணிதிரட்டப்படுவது, பெற்றோர் புதைகுழிகளில் தங்கள் பிள்ளைகளை தேடுவது, வீடுகளை விட்டு வெளியேறி அகதிகள் வாழ்க்கை, காணாமல் போன தமது பிள்ளைகளுக்காக நம்பிக்கை களுடன் காவல் இருப்பது. பெண்கள் வீட்டு வேலைகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வது,

சந்திரிகா பண்டாரநாயக்கா சமாதானத்திற்காக பெருமளவு ஆதரவினை பெற்றிருப்பினும் அவரால் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. பிரபாகரனும் இங்கு நெருக்கடியைத்தான் சந்திக்கிறார். அவருடைய ஈவிரக்கமற்ற தன்மையும் அவருடைய ஈகோவும் அவரை உள்ளிழுத்து வைத்திருக்கின்றன.

இலங்கை சமாதானத்தை தேடுகிறது.

யுத்தத்திற்கு இலங்கை எவ்வளவு விலையை செலுத்தியிருக்கிறது என்பதை இப்புத்தகத்தில் விளங்கிக்கொள்ளலாம் என்று இப்புத்தகத்தின் பின் அட்டை குறிப்பொன்று இடம்பெற்றுள்ளது.




இலகுவில் புரிந்துக்கொள்ளக் கூடிய மொழி நடையில் இது எழுதப் பட்டுள்ளது.

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, [illegible] C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org